## ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

### 3-ம் பிரிவு 20-வது அத்தியாயம்.

மகாத்மாகாந்தி "நவஜீவன்" பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவரும் தமது வரலாறு பின் வருமாறு:—

நான் கல்கத்தாவிலிருந்து ராஜகோட்டுக்குப் போக உத்தேசித்தேன். வழியில் காசி, ஜெய்ப்பூர், பலன்பூர் முதலிய இடங்களில் இறங்கிவிட்டுப் போகலாமென்று நினைத்தேன். மற்ற இடங்களில் இறங்க எனக்கு அவகாசமில்லை. இந்த இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நாள் தங்கியிருந்தேன். பலன்பூரைத் தவிர மற்ற இடங்களில் சாதாரண யாத்ரீகர்களைப் போலவே தர்மசாலைகளிலாவது பண்டாக்களுடனாவது தங்கியிருந்தேன். இந்த யாத்திரைக்காக ரயில்வேக் கட்டணமுள்பட 31 ரூபாய்க்கு அதிகமாகச் செலவழித்ததாக எனக்கு ஞாபகமில்லை.

மூன்றாவது வகுப்பு வண்டியில் யாத்திரை செய்கையில் மெயில் வண்டியில் அதிகக் கூட்டமிருக்குமென்று நினைத்து சாதாரண வண்டிகளில் சென்றேன். மெயில் வண்டியில் சென்றால் அதிகக் கட்டணமும் வேண்டியிருக்கும்.

### மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளின் கஷ்டங்கள்.

மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளுடைய வண்டிகள் பரம ஆபாஸமாக இருந்தன. கக்கூஸ்கள் இன்றிருப்பது போலவே அக்காலத்திலும் கெடுதலாகத் தானிருந்தன. இப்பொழுது சில அபிவிருத்திகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனாலும் முதல் வகுப்புப் பிரயாணக் கட்டணத்திற்கும் மூன்றாவது வகுப்புக் கட்டணத்திற்கு முள்ள வித்தியாசத்தின் அளவைவிட அதிகமாக சௌகரியத்தில் வித்தியாசமிருந்தது. மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளை அஜங்களைப்போல் நடத்துகிறார்கள். அஜங்களுக்குள்ள சவுகரியம்தான் அவர்களுக்கு மிருந்தது. ஐரோப்பாவில் நான் மூன்றாவது வகுப்பில்தான் யாத்திரைசெய்து வந்தேன். முதல் வகுப்புவண்டி எத்தகையதாக இருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளுவதற்காக ஒரு தடவை அதில் யாத்திரை செய்தேன். அங்கு இரண்டு வகுப்புகளுக்கும் இங்கிருந்தவரும் வித்தியாசம் கிடையாது. தென்னாப்பிரிக்காவில் நீக்ரோவர்களே அனேகமாக மூன்றாவதுவகுப்புவண்டிகளில் பிரயாணம் செய்கிறார்கள். ஆனால் அங்கு மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளுக்கு அதிக சௌகரியமிருந்துவருகிறது. தென்னாப்பிரிக்காவில் சில இடங்களில் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் இராக்காலத்தில் தூங்குவதற்கும் வசதியிருக்கிறது. ஆசனங்களிலும் மெத்தை தைத்திருக்கிறது. அதிகப்பேர் ஒரு வண்டியில் அடைந்துவிடாமலும் அங்கு தடுக்கிறார்கள். இங்கு திட்டத்திற்குமேல் பிரயாணிகள் ஏறாத வண்டிகளில்லை.

### எவ்விதம் கஷ்டத்தைப் போக்குவது?

அதிகாரிகள் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் விஷயத்தில் அலக்ஷிய புத்தியைக்காட்டி வருவதாலும், மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளும் அசுசியாக இருந்து வருவதாலும் சுத்தமாக இருந்துவர விரும்புகிறவர்களுக்கு மூன்றாவது வகுப்பில் பிரயாணம்செய்வது இங்கு பெரிய கஷ்டமாக இருக்கிறது. வண்டிகளிலேயே பலர் எச்சிலைத் துப்பி விடுகின்றனர்; பலர் வண்டிகளிலேயே அசுத்த பதார்த்தங்களைப் போட்டுவிடுகின்றனர். பலர் சதா சர்வகாலமும் சுருட்டுக்குடித்துக் கொண்டிருக்கிறார்கள்; சகோதரப் பிரயாணிகளுடைய சௌகரியத்தைக் கவனிக்காமல் வண்டி முழுவதையும் எச்சில் கலயமாகப் பாவித்து எச்சில் துப்பியும், உரக்கச் சத்தம் போட்டுக் கொண்டும், துர்ப்பாஷையான வார்த்தைகளை உபயோகித்துக்கொண்டுமிருக்கிறார்கள். 1902-ம் வருஷத்தில் மூன்றாவது வகுப்புப் பிரயாணம் இருந்து வந்த நிலைமைக்கும், 1915-ம் வருஷம் முதல் 1919-ம் வருஷம் வரையில் நான் தொடர்ச்சியாக மூன்றாவது வகுப்பு வண்டிகளில் பிரயாணம் செய்து வந்த காலத்தில் இருந்து வந்த நிலைமைக்கும் அதிக வித்தியாசத்தைக்காணேம். இதைப்பரிகரிக்க ஒரு வழிதானிருக்கிறது. படித்தவர்கள் மூன்றாவது வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்து ஜனங்களுடைய கெட்ட பழக்கங்களைத் திருத்தவேண்டும். அவசியமான போதெல்லாம் ரயில்வே அதிகாரிகளுக்குப் புகார்செய்து அவர்களுக்கு மனோசாந்தி இல்லாமற் செய்யவேண்டும். லஞ்சம் கொடுத்தாவது சட்ட விரோதமான வழிகளை அனுஷ்டித்தாவது, தங்களுடைய சொந்த சௌகரியங்களைப் பெருக்கிக் கொள்ளக்கூடாது. வெரும்விதிகளுக்கு விரோதமாக நடந்து கொள்ள இடங் கொடுக்கக் கூடாது.

இவ்விதம் செய்தால் நிச்சயமாக விசேஷ அபிவிருத்தி ஏற்படும். 1918-19-ம் வருஷத்தில் எனக்குக் கடுமையான உபாதை சரீரத்தில் ஏற்பட்டதாலேயே நான் மூன்றாவது வகுப்பில் பிரயாணம் செய்வதை நிறுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று. மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளுடைய குறைகள் நிவர்த்தியாகக் கூடிய நிலைமை ஏற்பட்டு வந்த சமயத்தில் இவ்விதம் நான் மூன்றாவது வகுப்புப் பிரயாணத்தை விட்டுவிட நேர்ந்தது. எனக்கே துக்கமாகவும், அவமானமாகவும் இருந்து வந்திருக்கிறது. கெட்ட பழக்கங்களினாலும், கவர்ன்மெண்டார் அந்நிய நாட்டினரின் வியாபாரத்திற்கு அதிகச்சலுகைகள் காட்டி வருவதாலும், வேறு பல காரணங்களாலும் ரயில் வண்டிகளிலும், கப்பல்களிலும் பிரயாணம் செய்யும் ஏழைப் பிரயாணிகளின் நிலைமை மிகவும் கஷ்டமானதாக இருப்பதால், இரண்டொருவராவது இவ்விஷயத்தில் தங்களுடைய பூரா கவனத்தையும் செலுத்தி வர வேண்டியது பரம அவசியமாக இருக்கிறது.

### காசியில் கண்ட காட்சி.

மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளுடைய நிலைமையை இம்மட்டில் விட்டு விட்டு, காசியில் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சொல்லுகிறேன். காலையில் அந்த ஊருக்கு நான் போய்ச் சேர்ந்தேன். ஒரு பண்டாவுடன் தங்கியிருப்பதென்று நான் தீர்மானித்துக் கொண்டிருந்தேன். நான் ரயில் வண்டியை விட்டு இறங்கியதும் பல பிராமணர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களுக்குள் சுத்தமாக இருந்த ஒருவருடைய வீட்டுக்குச் செல்லுவதென்று நான் முடிவு செய்து கொண்டேன். நான் பொறுக்கின இடம் நல்ல இடமாகவே இருந்தது. அந்த வீட்டில் மாடியிருந்தது. மாடியில் தங்கியிருக்க எனக்கு அவர் அனுமதி கொடுத்தார். கீழே ஒரு பசு கட்டியிருந்தது. வைதீக சம்பிரதாயப்படி கங்கையில் ஸ்நானம் செய்து, நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொள்ளாமல் ஆகாரத்தைப் புசிக்க நான் விரும்பவில்லை. அதற்கு வேண்டிய முஸ்தீப்புகளை அந்தப் பண்டா செய்தார். நான் எவ்விதத்திலும் 1¼ ரூபாய்க்கு மேல் தக்ஷிணை கொடுக்க முடியாதென்றும், அதற்குத் தகுந்தபடி ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும் முன்னதாகவே நான் அவரிடத்தில் சொல்லி விட்டேன்.

பண்டாவும் அதற்குச் சம்மதித்து விட்டார். யாத்ரீகர் ஏழையாக இருந்தாலும் பணக்காரராக இருந்தாலும் தமது வேலை ஒன்று தான் என்றும், தமக்கு தக்ஷிணை கொடுப்பது அவரவர்களுடைய சக்தியைப் பொறுத்ததென்றும் அவர் சொன்னார். வழக்கமாகச் செய்ய வேண்டியது எதையும் அந்தப் பண்டா என் விஷயத்தில் விட்டுவிடவில்லை. 12—மணிக்குள் பூஜை முடிந்துவிட்டது. பிறகு தரிசனத்திற்காக ஸ்ரீ காசி விசுவநாதஸ்வாமி ஆலயத்திற்குச் சென்றேன். அங்கு நான் கண்ட காட்சி என் மனதைப் புண்படுத்திவிட்டது. நான் 1891 ல் பம்பாயில் பாரிஸ்டர் தொழில் செய்து கொண்டிருந்தபோது, பிரார்த்தனா சமாஜ ஹாலில் காசி யாத்திரையைப் பற்றி நடந்த ஒரு பிரசங்கத்தைக் கேட்டிருந்தேன். ஆகையால் ஓரளவு நான் ஏமாற்றமடையவேண்டியிருக்குமென்று எதிர்பார்த்திருந்தேன். ஆனால் அதிக ஏமாற்றம் எனக்கு அங்கு ஏற்பட்டது.

ஒரு முட்டிச் சந்து வழியாக ஆலயத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. ஈக்களின் உபத்திரவமும், கடைக்காரர்களும் யாத்ரீகர்களும் போட்ட கூச்சலும் சகிக்க முடியவில்லை.

தியானமும், பிரார்த்தனையும் காணப்பட வேண்டிய இடத்தில் இரண்டையும் காணேம். யாரேனும் ஒருவர் இருந்து தியானம் செய்வதற்கு வசதியில்லை. சுற்று வட்டத்தின் நிலைமையைக் கவனிக்காமலே பல சகோதரிகள் பக்தியுடன் தியானம் செய்து கொண்டிருந்ததைப் பார்த்தேன். ஆனால் இந்தப் பெருமைக்குக் கோயில் அதிகாரிகள் எவ்விதப் பாத்தியமும் கொண்டாடுவதற்கில்லை. சீராவஸ்தையாவது, மனோவஸ்தையாவது ஏற்படாமல் நிர்ச்சிந்தையாக விருந்து தியானம் செய்வதற்கு அவசியமான வசதியைச் செய்து கொடுக்க வேண்டியது கோயில் அதிகாரிகளுடைய கடமையாகும். ஆனால் பக்கத்தில் நவீன நாகரீகத்தின் பண்டங்களையும், பொம்மைகளையும் வியாபாரிகள் வைத்துக் கொண்டு விற்று வந்தார்கள். நான் ஆலயத்திற்குச் சென்றதும், அழுகிப் போன புஷ்பங்களின் துர்நாற்றம் என்னை வரவேற்றது. உட்புறத்தில் சலவைக் கற்களால் தளவரிசை செய்யப்பட்டிருந்தது. ஆலய விசேஷத்தை அறியாத ஒருவர் அந்த அழகான தளவரிசையைக் கெடுத்து, ரூபாய்களை பதித்திருந்தார். அதனால் கீழே அழுக்குச் சேருவதற்கு இடமேற்பட்டிருந்தது.

நான் ஞானவாபியிடம் போனேன். ஆண்டவனை அங்கு தேடிப்பார்த்தேன். அவர் அகப்படவில்லை. ஆகையால் என்னுடைய புத்தி பேதளித்துப் போய்விட்டது. ஞானவாபியை சுற்றியுள்ள இடங்களும் அசங்கியமாக இருந்தன. தக்ஷிணை கொடுக்க என் மனம் வரவில்லை. ஆகையால் எனக்கு பைசாவைத் தக்ஷிணையாகக் கொடுத்தேன். பண்டா கோபமடைந்து அந்தப் பைசாவை வீசி யெறிந்தார். இவ்விதம் அவமானப்படுத்தியதால் நான் கோரக நரகத்திற்குப்போய் விடுவேனென்று அவர் சபித்தார்.

அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. "எனக்கு எவ்வித கதி நேருவதாக இருந்தாலும், உங்களைப் போலொத்த கோஷ்டியிலுள்ளவர்கள் அதைச் சொல்லுவது அழகன்று. வேண்டுமானால் இந்தப் பைசாவை எடுத்துக் கொள்ளுங்கள். வேண்டாவிடில் விட்டுவிடுங்கள்" என்று நான் சொன்னேன்.

"போ, வெளியே. உன்னுடைய பைசா எனக்கு வேண்டியதில்லை" என்று அவர் சொல்லிவிட்டு ஒரு அத்தியாயம் அவர் என்னை தூஷித்தார்.

நான் அந்தப் பைசாவை எடுத்துக் கொண்டு "பிராமணருக்கு ஒரு பைசா நஷ்டம்; எனக்கு ஒரு பைசா லாபம்" என்று சொல்லிக் கொண்டு வெளியே வந்துவிட்டேன். ஆனால் அந்தப் பைசாவை விடுவதற்கும் அந்த மகாராஜருக்கு மனமில்லை. அவர் மறுபடியும் என்னைக் கூப்பிட்டு "நல்லது; பைசாவை இங்கு வைத்துவிட்டுப் போம். உம்மைப்போல் நான் இருக்க முடியாது. உம்முடைய பைசாவை நான் வாங்கிக்கொள்ள மறுத்து விட்டால், உமக்குக் கெடுதி ஏற்படும்" என்று சொன்னார். நான் அந்தப் பைசாவைக் கொடுத்துவிட்டு வெளியே வந்துவிட்டேன்.

இதற்குப் பிறகு நான் இருமுறை காசிக்குச் சென்றிருக்கிறேன். ஆனால் "மகாத்மா" என்னும் பட்டம் எனக்கேற்பட்ட பிறகு நான் சென்றேன். ஆகையால் ஆதியில் ஏற்பட்ட அனுபவத்திற்கு இடமில்லாமற் போய்விட்டது. என்னைத் தரிசிக்க விரும்பியவர்கள் ஆலயத்தை நான் தரிசிக்க விடவில்லை. மகாத்மாக்களின் கஷ்டம் மகாத்மாக்களுக்குத்தான் தெரியும். மற்றப்படி அசங்கியமும், கூச்சமும் முன்போலவே இருந்தது.

ஆண்டவனுடைய கருணையில் எவருக்கேனும் சந்தேகமிருந்தால், இந்தப் புண்ய ஸ்தலங்களை அவர்கள் போய்ப் பார்க்கட்டும். தம்முடைய பெயர் வழங்குவதற்காக எவ்வளவு அக்கிரமங்களுக்கு ஆண்டவன் உட்பட வேண்டியிருக்கிறது? உப்பு விதைத்தால் கற்பூரக விளையுமா? கர்ம பலனிலிருந்து எவரும் ஆரம்பித்துக் கொண்டு விடமுடியாது. ஆகையால் கடவுள் தலையிட வேண்டிய அவசியமில்லை. அவர் சட்டத்தை விதித்துவிட்டுப் போய்விட்டார்.

கோயிலிலிருந்து திரும்பியதும், மிஸஸ் பெஸன்டைப் பார்க்கப்போனேன். அப்பொழுதுதான் அவர் வியாதியிலிருந்து குணமடைந்திருந்தது எனக்குத் தெரியும். பெயரை எழுதி அனுப்பினேன். அவர் உடனே எழுந்து வெளியே வந்தார். நான் அவரைப் பார்த்துவிட்டு வரவே விரும்பியதால் "உங்களுடைய தேகம் அசௌக்கியமாக இருப்பது எனக்குத் தெரியும். உங்களைப் பார்த்துவிட்டுப் போகத்தான் வந்தேன். தேகம் அசௌக்கியமாக இருந்தும் என்னைப் பார்க்க வந்ததற்கு நான் நன்றியுடையவனாக இருக்கிறேன். உங்களைக் காக்க வைக்க எனக்கு இஷ்டமில்லை" யென்று சொல்லி, அவரிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பிவிட்டேன்.

## இனிய கனிகள்.

மனச்சாட்சியின்படி நடக்கவேண்டுமெனச் சொல்வதுபோல் இலகுவானதும் அதன்படி நடப்பதுபோல் கஷ்டமானதும் உலகில் வேறெதுவுமிருப்பதாகத் தெரியவில்லை.

* *

நெருப்புக் கோழிகள் வேட்டையாட வருவோர்களை ஏமாற்றி தாங்கள் ஜெயித்துத் தப்பித்துக்கொண்டதாகப் பொந்துகளில் தலையை வைத்துக் கொள்ளுமாம். பின்னால் பிடிபட்டுத் தன் தவறுதல்களை உணர்ந்து விழிக்கும். இஃதே போலவே தீய மனிதர்கள் தீய விஷயங்களை வேட்டையாடுவோர்களை ஒரு வழியில் ஜெயித்து விட்டதாக எண்ணினாலும் பின்னால் அகப்பட்டு விழிப்பர்.

* *

தவறுதல் உலகசகஜம். பின்னும் பின்னுமவைகளைப் பின்பற்றுதலே விவேகமற்ற செய்கை.

* *

பிரபஞ்சத்தில் கெட்ட விஷயங்களைச் சொல்வோர்களெல்லாமனேகமாய் துர்நெஞ்ச முடையோர்களென்பது அங்கையங்கனி. ஆனால் நல் விஷயங்களைச் சொல்வோர்களெல்லாம் நன் மனஞ்சுடையோர்களில்லை யென்பது மிகையாகா.

* *

மைக்கு மைக்கூடு ஆதாரமே தவிர மைக்கூட்டிற்கு மை ஆதாரமில்லை. இதுபோல நமக்கு கடவுள் தாரசாரமே தவிர கடவுளுக்கு நாம் ஆதாரமில்லை.

* *

முன்னால் மணக்கோலம்; பின்னால் பிணக்கோலம். வலது பக்கத்தில் பார்த்தால் பிதா பிள்ளையைக் கண்டிக்கிறார்; இடது பக்கத்தில்கண்ணுற்றால்பிள்ளை பெற்ற பிதாவை தண்டிக்கிறான். கணவியை கணவனொருபுறம் பயமுறுத்துகிறான்; மனைவி வேறொருபுறம் வயமூறுத்துகிறாள். நீதிக் கட்சியை அநீதிக்கட்சி இன்னொருபுறம் கண்டிக்கிறது; அநியாயக்கட்சியை நியாயக்கட்சி மற்றொருபுறம் கண்டிக்கிறது. இவைகளெல்லாம் சதமற்ற உலகவிநோதக் காட்சிகளாய் தினமும் நடைபெறுகின்றன.

* *

திருப்தியில்லாதவன் திருப்பதி சென்றென்பயன்? பதமென்னாதவன் சிதம்பரஞ்சென்றென்பயன்? இறைவனை எண்ணாதான் வெண்ணீறணிந்தென்பயன்? உழையாதொருவருயரிடம் பெற்றென்பயன்? நீதிக்கின்றி யோதிக் குழைத்தென்பயன்?

* *

அடாதவழியில் நற்பெயர் எடாதிருப்பது எத்தனை நன்மை! அவ்வழி எடுப்பின் அது துர்ப்பெயரே தவிர நற்பெயராமா? காகமன்றோ வேம்பங்கனியை விரும்பும்? மூர்க்கரை மூர்க்கரன்றோ முகப்பர்?

அ. கு. அண்ணாமலைநாடார்.

## பலதிரட்டு.

பிரிட்டிஷ் வரவுசெலவு திட்டம் மின்வருமாறு 1927–28-க்கு தயார் செய்திருப்பதாக காமன் சபையில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது. உத்தேச வருமானம் 726850000-பவுன். செலவு 818390000-பவுன். இத்தன்மையில் துண்டுவிழும் தொகையை ஈடுசெய்ய வரிகளை உயர்த்த மார்க்கந்தேடி யிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

## சிவாஜி ஜயந்தி.

உலகப் பிரசித்தமாகவும். சர்வ வல்லமை படைத்தும் ஜெய சீலராய் இந்தியாவினிடத்தே ராஜ்யபாரம் தாங்கி ஆண்ட பழம் மன்னர்களில் ஒருவராய சிவாஜி மகாராஜாவின் 300-வது பிறந்த தினம் 1927-ஹூ மே மீ 3-ந்தேதி வருவதால் அத்தினத்தையொட்டி எங்கும் கொண்டாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இவ்வகையில் ஜனங்களிடத்தில் உண்மையும், வீரமும், ஊக்கமும் உற்சாகமும் ததும்பககாரண முண்டு.

## தன்மை தேடியவிடத்து ஆபத்து.

ஹரித்துவாரத்தில் கங்கை ஸ்நானம் செய்ய இருவருடங்களாக ஏராளமான யாத்ரீகர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். 13-4-27ல் கும்ப ஸ்நானத்திற்கு கட்டுப்படுத்த முடியாவாறு ஜனக்கூட்டம் பெருகிவிட்டதால் சௌகரியம் செய்துகொடுக்க ஒழுங்குகள் செய்யப்பட்டன. இருந்தாலும கயிறு கட்டி தடுக்கப்பட்டிருந்த இடத்தில் ஜனத்திரள் பெருகி நெருக்கடியாகிவிட்டதால் கயிறு அறுந்து ஜனங்கள் விழுந்து அல்லோல கல்லோலப்பட்டனர். 42 பேர்கள் இறந்தனர். 60 பேருக்கு பலத்த காயம்.

## கொடூரக்கொள்ளைக் கூட்டம்.

மெக்ஸிகோவைச் சேர்ந்த விமினில் 20-4-27-ல் கொள்ளைக் கூட்டத்தினர் ரயிலை தண்டவாளத்தினின்றும் இறக்கிவிட்டனர். 170 பிரயாணிகளையும் காவல் வந்த 17 சிப்பாய்களையும் கொன்றுவிட்டனர். மற்றும் பிரயாணிகளைப் பயமுறுத்தி வண்டிகளைப் பூட்டி பெட்ரோலையும் செரோஸினையும் ஊற்றி நெருப்பு வைத்துவிட்டனர். வண்டியெரிந்து ஜனங்கள் அலமோதி மாண்டனர். உயிர் தப்பியவர் ஒருவருமிரார்.

## அபினிக்கு அபராதம்.

சுமார் $1\frac{1}{2}$ மணங்கு நிறையுள்ள அபினியை கல்கத்தாவில் ஒரு ஐரோப்பியர் வைத்திருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டு ரூ 500 அபராதம் விதிக்கப்பெற்ருர்.

## பர்ஷியாவில் சண்டை.

பர்ஷியாதேசத்து ஹெஞ்சம் தீவில் அராபியர்கள் தாக்கி அங்குள்ளவர்களை வெட்டியும் குத்தியும் வெருட்டியோட்டுகிருர்கள். பர்ஷியாவுக்கு அத்தீவு பாத்தியமில்லையென்பதைக் காட்டிக்கொள்ளவே இவ்வித வழியில் இறங்கியிருக்கிருர்கள்.

## சீக்கியர்கள் வெளியேற்றம்.

குருத்துவாரா சம்பந்தமாய் கைதியாயிருக்கும் சீக்கியர்களை மத்திய போர்டு ஒப்பந்தப்படி சட்டம் ஒழுங்காக அமுலுக்கு வந்த பின்னும் விடுதலை செய்ய கவர்ன்மெண்டார் கருதாதிருப்பதால் தங்களுக்குள்ள அருவருப்பையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்ளும் பொருட்டாக தங்கள் பஞ்சாப் சட்டசபை, இந்தியச் சட்டசபை ஸ்தானங்களை ராஜிநாமாக் கொடுத்திருப்பதாக அறிவிக்கப் படுகிறது.

கனம் எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரியார் வர்கள் தென்னாப்பிரிக்கா இந்திய அரசாங்க ஏஜெண்டாக நியமிக்கப்பட்டு அவரும் ஒப்புக்கொண்டு விட்டதாகத் தெரிகிறது.

## அமெரிக்காவில் வெள்ளம்.

சென்றவாரம் அமெரிக்காவில் என்றும் இல்லாத மழையும் காற்றும் அகோரமாய் அடித்ததால் மிசிசிப்பி நதியில் வெள்ளப் பெருக்கேற்பட்டது. சில இடங்களில் கரையை அடித்துக் கொண்டோடியதால் 100000 பேர்கள் வீடில்லாது தவிக்கும்படியாய் பாழ்படுத்திவிட்டது. நூற்றுக்கதிகமான உயிர்ச்சேதம் நேர்ந்திருக்கிறது.

## இந்துமகாசபை.

வரும் ஆண்டிற்கு அகிலஇந்தியஇந்துமகா சபைக்கு டாக்டர் மூஞ்சே தலைவராகவும், லாலாஜி, மாளவியா, ராஜா நரேந்திரநாத், சர்ரம் பால்ஜிங் முதலியவர்கள் உபதலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர்.

## திருப்பதியில் தீபம்.

திருப்பதிமலையில் சுமார்ஐந்து மைல் தூரத்திற்கு மின்சாரவிளக்குப்போட மூன்றரை லட்சம் ரூபாய் செலவுதிட்டம் போட்டு வேலைநடத்த ஆரம்பித்திருக்கிறார்களாம்.

## திருமலைராஜன் பட்டணம்.

இவ்வூரின் கண் பிரபவ ஹூ சித்திரைமீ 4௳ யன்று ஸ்ரீ வாலசுப்பிரமணியக் கடவுள் எழுந்தருளியாகிநகர வலம்வந்து கூடியிருந்த பக்த கோடிகளுக்கு காக்ஷியளித்து அனைவரையும் பரவசப்படுத்திய நேர்த்தி வெகு ரம்மியமாயிருந்தது. இக்காக்ஷியைக் கண்ணுற்ற மக்களும் நமது நாடார்குல மித்திரனும் என்றென்றும் குறைவின்றி வாழ ஆண்டவன் அருள் புரிவாராக என்று ஸ்ரீமான் பெ. சங்கரநாடார் எழுதுகிருர்.

## நெருப்பு.

இராமநாதபுரம் ஜில்லா மண்டபத்தில் 24-4-27ல் தீப்பற்றி ஐந்தாறு வீடுகள் சேதமாயினவென்றும், உயிர்ச்சேதம் கிடையாதென்றும் நெருப்பு அகஸ்த்துமாத்தாய் பற்றிவிட்டதாகவும் 25௳ இருட்டு ஊருணியில் ஒரு வீட்டில் ஒரு திருடன் தீக்கொளுத்திச் சென்றுவிட்டானென்றும், நடவடிக்கை யெடுத்துக்கொள்ள கிராம அதிகாரியிடம் அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் ஸ்ரீமான் சு. பு. மா. வெள்ளையப்பநாடார் எழுதுகிருர்.

## ஸ்டாம்பு விலை மதிப்பு.

சில வாரங்களுக்கு முன்பு ஒரு தபால் தலை லண்டனில்680 பவுனுக்கு விற்கப்பட்டதாம். அது மேற்கு ஆஸ்திரேலியாவில் 1854-ம் வருஷம் அச்சிடப்பட்ட 4 பென்ஸ் தலை. அது நீல நிறமுள்ளது. அதில் தலைகீழாகவுள்ள ஒரு அன்னத்தின் உருவம் வரையப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் கயானுவிலுள்ள மற்றொரு தலை பிரான்ஸ் தேசத்தில் 3 ஆயிரம் பவுனுக்கு ஏலத்தில் விற்கப்பட்டதாம். 1903-ல் இங்கிலாந்தில் மாருஷியஸ் தலையென்று 1300 பவுனுக்கு ஏலத்தில் போயிற்ரும்.

## பொருள் நிறை உரைகள்.

பிறர் உங்களை அமுக்கிவைக்கும்படி விட்டுக் கொண்டிருப்பதும் உங்களுடைய உயிரையே உண்மையில் இழந்து கொண்டிருப்பதுந்தான் பொறுமையெனக் கொண்டால் அத்தகைய பொறுமையில் நம்பிக்கை சிறிதும் எனக்கில்லை. அது பொறுமையுமாகாது. அநேகமாக தற்கொலை செய்து கொள்வதேயாகுமெனச் சொல்லலாம்.

—லாலா லஜபதிராய்.

நாம் (நாயுடு) உயர்ந்தோர் என்னும் கூட்டத்தாருக்கும் தாழ்ந்தோர் எனும் கூட்டத்தாருக்கும் மத்தியிலிருந்து கொண்டிருக்கிறோம். நம்மால்த்தான் இம் மூவரையும் ஒன்று சேர்க்க முடியும். ஆகவேநாம் நம் இரு கால்களையும் நீட்டி ஒரு காத்தால் உயர்ந்தோர்கள் எனச் சொல்லிக் கொள்ளும் பிராமணர்களையும் பிறிதொரு காத்தால் தாழ்ந்தோர் எனச் சொல்லிக் கொள்ளும் தீண்டப்படாதவர்களையும் சேர்த்து அணைத்து ஒன்று சேர்ப்போமாக.

—ஸர். கே. வி. ரேட்டி.

ஒன்று சேர்த்து, நாம் மூவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்; எப்படியோ காலக் கொடுமையால் இதுபரியந்தம் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்திருந்து விட்டோம்; இனி முதல் நாம் சகோதர வாஞ்சையுடன் ஒற்றுமையாய் ஒன்றுபட்டு வாழ்வோம் என்று ஒருவர்க் கொருவர் விட்டுப் பேசும்படி செய்வோமாக.

—ஷையார்.

ஒரு குடும்பத்தில் நாலு சகோதரர்கள் இருந்தால் மூத்த குமாரன் தன் மட்டில் பொதுச் சொத்திலிருந்து ஏகபோகமாக செலவு செய்து சுக வாழ்வு நடத்தி வந்தால் இளைய சகோதரர்கள் எவ்வளவு காலந்தான் பொறுத்திருக்க முடியும்? மூத்த சகோதரனுக்குப்போல் இளையவர்கட்கும் சொத்தில் சம பாத்தியம் உண்டென்ருல் அது குற்றமா? துவேஷமாகுமா? இந்தியர்களுக்குப் போதிய சுதந்திரமும், அந்தஸ்தும் இந்தியாவிலிருக்க வேண்டுமென்று சட்டசபையில் கேட்டால் இது பிரிட்டிஷ் துவேஷமாகுமா?

—ஷையார்.

துர் அதிஷ்டமுள்ள நம் இந்தியாவில்த்தான் மதத்தின் கொடுமைகளும், சமூகக் கொடுமைகளும் தலை விரித்தாடுகின்றன. மதத்தின் பேரால் நமக்குக் கையிலும், காலிலும் விலங்குகள் பூட்டப்பட்டிருக்கின்றன. இக் கொடுமைகளினின்றும், விலங்குகளினின்றும் விடுபடவே நாம் மதத்தையும், ஜாதியையும் தாக்கிக் கொண்டிருக்கின்ருேமே யன்றி தனிப்பட்ட மனிதர்களை நாம் ஏதும் கண்டிப்பதில்லை.

—ஷையார்.

## நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

நாடார் குல கனவான்களே!

ஊர்ப்பொதுவில் உங்களால் ஏற்படுத்தப் பெற்றிருக்கிற உறவின்முறை சட்ட திட்டங்களுக்கு எக்காலமும் கீழ்ப்படிந்து நடவுங்கள். "உறவின்முறை தெய்வசபை".

அதன் ஆதரவில் வித்தியாசாலை, தேவாலயம் முதலிய தர்மங்களின் அபிவிருத்திக்காக வசூலிக்கப் பெற்றுவரும் "மகமை"யைத் தவருமலும், குறைக்காமலும், மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமலும் எப்பொழுதும் கொடுத்துவரும்படி கேட்டுக்கொள்கிருேம். "மகமையே மகிமைதரும்."

காரியதரிஸிகள்.

## "மித்திரன்" க்ஷேமநிதி.

நமது மித்திரனின் க்ஷேமநிதிக்கு இலங்கையில் பலமான ஆதரவுஇருந்து வருகின்றது. பெரும்பாலும் வசூலான தொகைகள் உடனுக்குடன் அனுப்பிக் கொண்டேயிருக்கிருர்கள். இம் முயற்சியில் பெரும்பாலும் வியாபாரகனவான்களும் சாதாரண ஜனங்களும் மிக எழுச்சியுடன் ஈடுபட்டிருக்கின்றனர். அதிபரவர்கள் இங்கு விஜயம் செய்திருந்த காரணத்தாலும் குலாபிமானத்தாலும் வாலிபர்கள் மத்தியில் புதிய உற்சாகமும் குதூகலமும் ஏற்பட்டிருக்கின்றன என்று இலங்கையினின்றும் ஒரு நிருபர் எழுதுகிருர்.

## நாடார் பாங்கும், தமிழும்.

தமிழ் நாட்டில் அந்நிய நாட்டவர்களால் நடத்தப்படுகிற பாங்குகளில் கூட கணக்கு வைத்துக் கொள்ளுபவர்களுக்கு தமிழிலேயே செக் புத்தகங்கள் முதலியவைகள் வைத்திருக்கின்றனர். நமது நாடார் பாங்கோ பெரும்பாலும் நமது நாடார் குல சமூகத்தவர்களாலேயே தான் நடத்தப்படுகிறது. பாங்கு எடுத்துக் கொள்பவர்களும் நாமே—தமிழ் தெரியாதவர்கள் அதில் பங்கெடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. அப்படியிருந்தும் எல்லாம் ஆங்கில மயமாகவே இருக்கிறது. பங்குக்காரர்களுக்கு அனுப்பும் வரவு செலவு கணக்கு யாதாஸ்து கூட ஆங்கிலத்திலேயே தான் அச்சிட்டு அனுப்பியுள்ளார்கள். ஏன் தமிழில் அச்சிட்டனுப்பக் கூடாது? ஆங்கிலந்தெரியாதவர்களுக்கு அதனுல் எவ்வளவு சிரமம் இருக்கிறதென்பதை பாங்கின் மானேஜிங் டைரக்டர்கள் முதலியவர்கள் அறியாததல்ல. இனிமேலேனும் தமிழில அறிக்கை, யாதாஸ்து முதலியவைகளை வெளியிடுவார்களாக.

பு. கு. அ. ஆறுமுக நாடார்,
(ரங்கூன்).

## சிலுவைச் செடி.

ஐரோப்பாவில்அநேக பாகங்களிலும் விசேஷமாக பலஸ்தீன் நாட்டிலும் குருசு வடிவம் போன்றசெடியொன்று முளைக்கிறது. இது முளைக்கும் போதே சிலுவை போன்ற வடிவாக மூன்று இலைகளைக் கொண்டிருக்கிறது. அவ்விலைகளில் இரத்தத்துளிகள் போன்ற சிவப்புப் புள்ளிகளிருக்கின்றன. நாட்படவே அம்மூன்று இலைகளிலும் மூன்று சிலுவைகள் காணப்படுகின்றன. நிறம்வெண்மையாக விருக்கிறது. சிலுவையின் நடுவில் உருவம் தோற்றப் படுகிறது. நடுஇலையின் சிலுவையிலுள்ள உருவம் வெள்ளை வஸ்திரம் அணிந்ததாயும் மற்ற இரண்டு பக்கத் திலைகளின் உருவங்கள் கருப்பு சிவப்பு வஸ்திர மணிந்திருக் கின்றதாயுமிருக்கின்றன. இவ்விதம் முளைத்த அச் செடி பூவரும்பெடுக்கத் தொடங்கிய பின்நடுவில் முண்முடியைப் போன்ற நூரே யோர் புஷ்பத்தைக்கொண்டதா யிருக்கிறது. இவ் வற்புதச் செடி காலஞ் செல்லச் செல்ல மத்தியிலையின் உருவந் தவிர மற்ற இலையின் உருவம் மாறிப்போகிறது. நடு இலையின் உருவம் மாத்திரம் அச் செடியிலைத்திருக்குந்தனையும் அழியாதிருக்கின்றது. இவ் வற்புதச் செடியைச் சில இடங்களில் பாடுபட்ட சுருபச் செடி யென்று அழைக்கிருர்கள். இதன் உற்பத்தியைப்பற்றி ஒருசரிதை யுளதாம். அதென்ன வெனில்:—நம தாண்டவராகிய யேசு கிறிஸ்து நாதரைச் சிலுவையில் அறைந்து கொல்லும்படியாகப் பிலாத்தென்பவன் தீர்வையிட்டுத் தன் பேரில் பழியொன்று மில்லையெனத் தன் கைகளைத் கழுவினபோது அவனுடைய கொடிய அநியாய பாதகத்தை எந்நாளும் காட்டும் பொருட்டு அவன் இரண்டு பாதங்களுக்கும் நேராக இரண்டு செடிகளும், அவன் ஆசனத்தினின்று எழுந்து போனபோது அவன் பாதங்கள் பட்ட இடங்களில் ஒவ்வொன்றும் உண்டானதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

நாடார்குலமித்திரன்
பிரபவ ௵ சித்திரை மீ உ௰ ௳

## புது வருடம்.

அறுபதாம் ஆண்டு அக்ஷய முடிந்து, ஆரம்பித்திருக்கும் பிரபவ ௵த்தையே புது வருடமென்கின்றோம். அறுப தாண்டுகளின் முதலிருபது வருடங்களும் உத்தம காலமென்று சோதிடர்கள் கூறுவதற்கேற்ப சித்திரை முற்பாகத்திலேயே நாடெங்கும் நல்ல மழை பெய்து வருகிறதைப் பார்க்கின்றோம். அக்ஷய ஆண்டினிறுதியில் மக்கள் மிக்க மனக்கலக்கமடைந்ததும் வாவி, குளம், கிணறு மடு, ஏரி, நதி முதலிய நீர் நிலயங்களெல்லாம் வற்றி, ஆடு மாடுகள் அருந்துவதற்குங்கூட நீரின்றி அருணன் தகிப்பினால் மிகவும் அவஸ்தைகளடைந்ததும் புது வருடப் பிறப்பிலேயே ஒருவாறு மாறுங் குறிகள் கண்டதுபற்றி மனமகிழ்வடைகின்றோம். புதுவருடத்தில் புதுப் பலன்களையும், புத்துணர்ச்சியையும் பெற்று பொது நலமோங்கி மக்கள் புது வாழ்வும், பெருவாழ்வுங்கொள்ளக் கடவுளை மனமுவந்து பிரார்த்திக்கின்றோம்.

தங்கமே யனையார் கூடிய ஞான
சமரச சுத்த சன்மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவுஞ் சங்கஞ்
சார்திருக் கோயில் கண்டிடவும்
துங்கமே பெறுஞ் சற் சங்க நீடூழி
துலங்கவுஞ் சங்கத்திலடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி
ஆடவுமிச்சை காணெந்தாய்

என்றும்,

கருணையே வடிவாய் பிறர்களுக்கடு
த்த கடுந்துயரச் சமாதிகளைத்
தருண நின்னருளாற் றவிர்த்தவர்க்
கின்பந் தரவும் வன் புலை
கோலை யிரண்டும்
ஒருவிய நெறியிலுலகெலா நடக்க
உளுற்ற வுமம்பலந்தனிலே
மருவிய புகழை வழுத்தவு நின்னை
வாழ்த்தவு மிச்சை காணெந்தாய்

என்றும் சைவ சன்மார்க்க நெறி தவறாச் சிவானு பூதிச் செல்வர் — தமிழ்ப் பெருங் கிழவர் இராமலிங்க சுவாமிகள் பாடியதற்கேற்ப, நம் தாயாம் பாரத தேவியை உள்ளத்திருத்தித் துதித்து ஹே பாரதமாதா! உலகத்திலே உயர்ந்தோர் கூடும் ஞான சமரச சன்மார்க்க சங்கங்களைக் கண்டு களிப்பவே எங்கள் வேலை; அச்சங்கஞ் சார்ந்த திருக் கோயில் காண்பதுவே எங்கள் கொள்கை; அச்சங்கம் நீடூழி துலங்கச் செய்வதே எங்கள் கடமை; அச்சங்கம் அங்கமாய் நின்றாடவும், பாடவுமே செய்வோம்; பிறர்களுக்கு வருங் கடுந்துயரம் மன வச்சம் முதலியவைகளைத் தருணங் கண்டு தவிர்க்கக் கருணையுங் கொள்வோம்; உலகமே புலை கோலை யிரண்டையுந் தவிர்த்தின்புறும் புகழையே விரும்புவோம் என்று மக்களின் நல்லெண்ணங்களைப் புது வருடத்தின் முன்பு பரப்புவரேல் நல் வாழ்வே நம் வாழ்வாகுமன்றோ.

நாடு செழிக்க வேண்டும்; நல்ல மழை பெய்ய வேண்டும்; ஏழைகள் துயர் தீர வேண்டும்; எல்லோரும் வாழ்க வேண்டும்; தமிழ் மொழி சிறக்க வேண்டும்; சைவ சன்மார்க்க முயர வேண்டும்; நாட்டிலெங்கணும ராட்டினம் சுழலல் வேண்டும்; கைத் தறி பெருக வேண்டும்; கதர் மணங் கமழ வேண்டும்; சுதந்தரம் பெருக வேண்டும்; சுயராஜ்யம் வருத வேண்டும் என்ற நல்லெண்ணங்களே எல்லோர் மனதிலும் புது வருடத்தின முன்பிலங்கவே பிரார்த்திப்போமாக. ஒவ்வொருவரும் நல்லெண்ணங்களோடு நல்ல காரியங்களை முடிக்கப் புது வருடப் பிரதிக்கினை செய்து கொள்வோமாக. எவ்வழியிலும் நல்ல தீர்மானங்களைக் கொண்டே நடப்போமாக. அக்ஷய வருடக் கால நிலையால் கைவிடப்பட்ட நல்ல காரியங்களையெல்லாம் நிச்சயமாய் முடிப்போமென்று உறுதி கொள்வோமாக. எதிர் வாழ்க்கைக்கின்றியமையாப் பெருஞ் சாதனமாகிய இளஞ் சிறார்கள் இதயங்களிலும் எல்லா நல்லெண்ணங்களும் இடைவிடாது மலரும்படி எல்லோரும் எப்போதும் முயற்சி செய்வோமாக. இதுவே புதுவருடப் பிரதிக்கினைகளாக அனைவரும் கொண்டிடில் ஆனந்தம் ஆனந்தமே. புது வருடம் வாழ்க; பொது நலம் வாழ்க; கற்றவர் வாழ்க; கதர் வாழ்க; மகாத்மா காந்தி நீடூழி வாழ்க; வாழ்க, வாழ்க.

## குறிப்புகள்.

### லாட்டரி அறிவிப்பு.

நமது "நாடார்குல மித்திரன்" க்ஷேமநிதித் தர்மப் பண்டு லாட்டரியைப் பற்றி பல அறிவிப்புகளும், விளம்பரங்களும், வேண்டுகோள்களும் இதற்கு முன் செய்யப்பட்டிருக்கின்றன.

பிரைஸ் எடுப்பதற்குப் பதினைந்து நாட்களுக்கு முன்பாகவே பணமும், கவுண்டர்பாயில்களையும் அனுப்பிவிட வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தோம். அப்படி யிருந்தும் இது வரையும் பணம் அனுப்பியவர்களின் கவுண்டர் பாயில்கள் சில வந்து சேராமலும், சில கவுண்டர்பாயில்கள் மட்டும் வந்து அவற்றிற்குப்பணம்வந்து சேராமலும் இருக்கிறது. ஆகையால் நாளது சித்திரை மீ 25 ௳ சனிக்கிழமை வரையும் வருகிற கவுண்டர் பாயில்களையும், பணங்களையும் ஒப்புக் கொண்டு அவைகளையும் சேர்த்துப் பிரைஸ் எடுப்பதாக உத்தேசித்திருக்கிறோம். ஆகையால் அதற்கு முன் எல்லோரும் பணங்களையும், கவுண்டர் பாயில்களையும் தாமதமின்றி அனுப்பி வைக்கும்படி வேண்டுகிறோம்.

பிரைஸ் எடுக்கும் தினத்தைத் தள்ளிவைக்கப்படுமோவென்று எழுதிக் கேட்டுக் கொண்டிருப்பவர்களுக்கும், தள்ளி வைக்கப்படுமென்று எதிர்பார்த்திருப்பவர்களுக்கும், தள்ளி வைக்கப்பட மாட்டாதென்று தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆகையால் தயவு செய்து உடனே கவுண்டர் பாயில்களையும், பணங்களையும் அனுப்பி வைக்கும்படி மீண்டும் வேண்டிக் கொள்ளுகிறோம். சிவகாசியில் வாலிப நண்பர்களும் மிக்க உதவி செய்து வருகிறார்கள், மற்றப் பாகங்களின் வாலிப நாடார்களையும் உதவி செய்யும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

### பெரிய மனிதர்கள் பேச்சு.

சென்னை கார்ப்பொரேஷன் கூட்டத்தில், நகரில் பெரிய மனிதர்களாகவும், ஜனங்களின் சௌகரியத்தைத் தேடுபவர்களாகவும், வழி காட்டிகளாகவும், விரிந்த நோக்கமும், பரந்த மனமும் உடையவர்களாகவும் இருக்கிறோம் என்று சொல்லி ஜனங்களின் பிரதிநிதிகளாக வந்து இருந்து கொண்டு தகாத பேச்சும், அடாதவார்த்தையும்கேளாதவசையும்பாடிக் கொண்டிருப்பது எவ்வளவு யோக்கியதை! நாய், கழுதை என்று பேசிக் கொள்வது? ஒவ்வொருவரும நான் அதற்குச் சளைவன்; இதற்குக் காரியஸ்தன் என்று பேர் வகித்து மணலைக் கயிறாய்த் திரிக்கிறேன்; வானத்தை வில்லாய் வளைக்கிறேன் என்று மமதை பேசி வாய்ப்புராணம் பேசவா கார்ப்பொரேஷனுக்கு வந்தனர்? நாங்கள் நாகரீகர்கள்; மேம்பட்டவர்கள்; எங்கள் நாடு அப்படி இப்படியிருந்தது; முன்னோர்கள் மகா சமர்த்தர்கள்; பலேகில்லாடிகள் என சரமாரியாகப்புகழுரை பேசிக் கொள்ளும் இந்த இந்தியர்கள் பொதுஜன ஊழியத்தில் நடந்து கொள்ளும் யோக்கியதையை ஆண்டவன் தான் கண் கொண்டு பார்க்க வேண்டும்! இந்நிலையில் கார்ப்பொரேஷன் தேர்தல் நாள் கிட்டுகிறது. எம்மட்டும் போர் நடக்குமோ!

### மைசூர் சமஸ்தானம்.

இந்தியாவிலுள்ள சுதேச சமஸ்தானங்கள் எத்தனையோ இருந்தாலும், அவைகட்கெல்லாம் பிரபலமாயும், உயர் நோக்கங் கொண்டதாயும், மக்கட்கு நன்மை தேடும் மார்க்கங்களில் சதா கவனம் செலுத்தி அதற்கான முறைகளைக் கூசாது கையாடி வருவதாகவும் உள்ளது மைசூர் சமஸ்தானத்தைத் தவிர வேறு இருப்பதாகத் தற்கால சரித்திரத்தில் சொல்லப்பட்டு வரவில்லை. இதற்கனுகுணமாக மைசூர் சமஸ்தானத்தில் விவசாயக்குடியேற்றத் திட்டமொன்றை அனுமதித்துள்ளார்கள். இதன்படி ஒரு இடத்திலுள்ள 20 தாழ்த்தப்பட்ட வகுப்புக் குடும்பங்களுக்கு எட்டு ஏக்கர் நிலமும், அதைப் பயிரிட நேரும் செலவும், தளவாடங்களும் கொடுக்கப்படும். முதல் மகசூல் வரை இந்தக் குடும்பங்களுக்குக் குடும்ப சவரக்ஷணைக்குப் பணம் கொடுக்கப்படும். இந்தத் திட்டம் ஒவ்வொன்றுக்கும் சமஸ்தானத்திற்கு ரூ 3000 செலவாகக் கூடுமாம். இவ்விதம் தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு ஆதரவு காட்ட முன் வந்திருக்கும் சமஸ்தானத்திற்கு நாம் நன்றி செலுத்துகிறோம்.

### பத்திரிகைத் தொழிலால் நான் படும் பாடு.

எத்தொழிலிலும்சயநலத்தொழிலிற்றான் கஷ்டமும், நஷ்டமும் வருவது சகஜமெனப் பொது நோக்காகவும் மேலெழுந்த வாரியாகவும் கருதப்படுகிறது. சுய நலம் எது மின்றி பொது ஜன நன்மைக்கான வேலையில் இறங்கினாலும் அங்கும் பன்மடங்கதிகமான கஷ்ட நஷ்டங்கள் இல்லாமலில்லை யென்பதை நமதனுபோகத்தான் அறிவோம். அவ்வகைக் கஷ்டங்கள் தோன்றுங் காலத்து அபிமானிகளும், பெரியோர்களும் சமய சஞ்சீவிகளாய் நின்று ஒத்துழைப்பது எத்துணை அத்தியாவசிய மென்பதையாம் வலியுறுத்திக் கூறுவோம்!

சமீபகாலமாய் நமது பத்திரிகைத் தொழிலில் ஏற்பட்டு வந்திருக்கும் கஷ்டத்தையும், நஷ்டத்தையும் பொது ஜனங்கள் அறிய முன்னரே தெரிவித்துள்ளோம். நமது மித்திரனின் நிலைமையைப்பற்றி எமது முயற்சி ஒரு பக்கமிருப்பினும், அபிமானிகளும், பெரியோர்களும் அவன் பால் இரங்க வேண்டிய தன்மையிலிருக்க இதே பொருள் நஷ்டத்தால் அவதியுறும் எத்தனையோ தேசாபிமான, குலாபிமான, சமூகாபிமான சகபாடிகள் இம் முறை யீடுகளுக்கு யாம் பெரிதும் அனுதாபமுள்ளவர்களாகவே யிருக்கின்றோம்.

*

முஸ்லிம் உலகிற்கு இந்தியாவில் சேவகராய் விளங்கும் உண்மைக் காந்தியடிகளின் தோழரான மௌலானா முகம்மதலி தனது சகோதரருக்கெழுதிய கடிதமொன்றில் பின் வருமாறு குறிப்பிடுகிறார்:—

“எனக்கு மாத மொன்றுக்கு 1500 ரூபாய் நஷ்டமாகிறது. நஷ்டத்தைக் குறைக்க சந்தர்ப்பமில்லை. கடவுள் இஸ்லாம் மதத்தைச் சோதிக்கிறார். ஒன்று நான் நடத்திவரும் ‘காம்ரேட்’ பத்திரிகையை நிறுத்திவிட்டு இரு பத்திரிகைகளால் நேரும் நஷ்டத்தைத் தவிர்க்க வேண்டும்; இல்லையேல் பொது விஷயங்களிலிருந்து விலகி மதப் பாடம் சொல்லிக் கொடுப்பதால் கிடைக்கும் 50 ரூபாயைக் கொண்டு என்காலத்தைக்கடத்தவேண்டும். குடும்பத்தில் பெண்டும் பிள்ளைகளுமாக நூல் நூற்று தையல் வேலை நடத்துவதால் சமார் ரூபாய் 80 கிடைக்கிறது. நான் மசூதி ஒரு மூலையிலிருந்து கொண்டு குரானையும், தேகாரோக்கியத்தையும் பற்றி படிப்போருக்கு அவர்களுக்கும் சொல்லிக் கொடுப்பேன். எதற்கும் என்னால் ஆனமட்டும் முயற்சித்துப் பார்க்கிறேன்.”

மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கும் தேசம் போற்றும் ஒரு உத்தமருக்கு ஏற்பட்டிருக்கும் சங்கடமான நிலைமையை நிவர்த்தித்து பொது ஜன சேவையிலவாவுள்ள அன்னாருக்குப் போதிய ஆதரவு காட்டி ஊக்க மூட்டி வருவது இந்திய மக்கள் மேற் பட்ட கடமை யென்பதை யாம் சொல்லாமல் விவேகத்தில்லை.

### உலகில் பெரிய கிழவன் சைவ உணவுக்காரனும்!

“வெஜிடேரியன் மகஸைன்” என்னும் சைவ உணவுப் பத்திரிகை பின்வரும் விவரத்தைத் தெரிவிக்கிறது:—

தற்போது உலகிலேயே வயதினால் மூத்தவன் என்று கூறிக்கொள்ளும் ஸோரா ஆகா என்பவன் கான்ஸ்டாண்டி நோபிளில் தனது 150-வது பிறந்த தினத்தைக் கொண்டாடினன். அவனுடைய வயதை நிரூபிப்பதற்கு அவன் பிறந்த தினத்தைக் குறிக்கும் அரசாங்க அத்தாட்சிப் பத்திரத்தை வைத்திருக்கிறான். சென்ற 120 ஆண்டு காலமாக, அவ்வப்போதிருந்த மனிதர்களைப்பற்றியும், நிகழ்ச்சிகளைப் பற்றியும் அவன் ஞாபகத்திலிருந்து கூறும் விவரங்களெல்லாம் நிரம்பப் பொருத்தமாயிருக்கின்றன. அவன், தான் எப்போதும் ஏழையாகவேயிருந்தபடியால் புலால் உணவு அருந்தியதே கிடையாதென்றும், திராட்சைப்பழம், அத்திப்பழம், தேன் இவைகளே தன் முக்கிய உணவுப் பொருள்களாக இருந்து வந்திருக்கின்றன வென்றும் கூறுகிறான். அவன் ஐந்து மனைவிகளைக் கலியாணம் செய்துகொண்டான். முதல் மூவரும் ஏககாலத்தில் இருந்தனர். இப்போது உயிரோடிருக்கும் ஐந்தாவது மனைவிக்கு 65 வயதாகி விட்டபடியால் கிழவியாகி விட்டாளென்றும், தனக்குப் பொருத்தமான ஆளாயில்லை யென்றும் அவன் சொல்கிறான்!

### திருச்சுழிகை.

திருச்சுழிகை இந்து நாடார் க்ஷத்திரிய வித்தியாசாலையின் முன்னேற்றத்தைத் தன்னேற்றமெனக் கருதி அது விஷயமாய் பல வழிகளிலும் முழுமனதுடன் ஒத்துழைத்து பல அரிய நன்மை புரிந்தவரான இவ்வூர் சப்ரிஜிஸ்திராரும் ஸ்பெஷல் மாஜிஸ்திரேட்டுமான மகா-ள-ள-ஸ்ரீ எ. என். வெங்கட்டராமய்யர் பி. ஏ. அவர்கள் தற்சமயம் இவ்வூரிலிருந்து திருநெல்வேலிஜில்லா ஆழ்வார்திருநகரி என்னும் ஊருக்கு மாற்றப்பெற்றிருப்பதை முன்னிட்டு இவ்வூர் நாடார்மகாஜனங்களால் வித்தியாசாலையில 26-4-27 செவ்வாய்க்கிழமை மாலை 5-மணிக்கு தேயிலேப்பான விருந்து நடத்தப்பெற்றது.

மா. பழனியப்பன்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# உள்ளதைச் சொல்லிக் கெட்ட பண்டாரம்.

(முன் தொடர்ச்சி.)

தெய்வ வணக்கம் எத்தேசத்திலும் எக்காலத்திலும் எவ்வித ரூபத்திலும் அனுஷ்டிக்கப்பட்டே வந்திருக்கிறது. எனவே எவ்வளவிலேனும் ஓர் கோவிலும், எம்மதிப்பிலேனும் அதற்குத் தகுந்த குருவும் ஏற்பட்டே வந்திருக்கின்றனர். துவக்கத்தில் இக் குருக்கள் கோவில்களைப் பெருக்கவும் பாத்திரங்களை விளக்கவும் விக்கிரகங்களைச் சுத்தம் பண்ணவும் வரி கொடுக்கும் ஜனங்களின் கட்டளைகளை நிறைவேற்றி வைக்கவும் நியமிக்கப்பட்ட ஓர்வித ஊழியர்களாகவே யிருந்து வந்தனர். பின்னால் காலம் செல்லச் செல்ல கோவில் மணியங்கள் அதிகப்பட அதிகப்பட குருக்களே ஜனங்களுக்குக் கட்டளையிடவும் ஜனங்கள் குருக்களுடைய வாக்கை தேவ வாக்காக மதித்து நடக்கவுமான மாறுதலேற் படுவதாயிற்றென்பதே மார்க்கசரித்திரங்களின்பொழிப்பாகும். ஆயினும்குருக்களுக்கேற்பட்டமிதமிஞ்சிய அதிகாரத்தைக் குறைக்கும்படியான கிளர்ச்சியும் போராட்டமும் காலாகாலங்களில் ஏற்படாமலில்லை. 16-ம் நூற்றாண்டில் ரோமை போப்புகளின் அதிகாரத்தைக் குறைக்க லூத்தரும், இங்கிலாந்து சபைக்குருக்களின் ஒழுங்கீனத்தைக் கண்டிக்க 18-ம் நூற்றாண்டில் ஜான் வெஸ்லியும் மேல் தேசத்திலேற்பட்டது போலவே நமது தேசத்திலும் சமீபத்தில் சீர்திருத்த சம்பந்தமாய் அகாலியர் போராட்டமும், சென்னை, பம்பாய் மாகாணங்களில் பிராமணரல்லாதார் இயக்கமும் ஏற்பட்டதென்று சொன்னால் மிகைப்படையாகாது. அவ்வண்ணமே திருநெல்வேலியில் சுமார் 50 வருஷங்களுக்கு முன்னதாகவே கிறிஸ்தவ மிஷனரிகளோடு முரண்பட்டு சுயாதீனமான ஓர் சபையைக் கண்டுபிடிக்கும் அவசியம் காலஞ்சென்ற பிரகாசபுரம் கவிநாயகம் சட்டம்பிள்ளை ஐயாவுக்குத் தோன்றியது. அவர்களால் ஏற்பட்ட சபையானது கானதம் சிறந்தவிளங்கிக்கொண்டிருக்கிறது. பின்னால் சமீபகாலத்தில் இலஞ்சி, ஆள்வார்தோப்பு முதலிய இடங்களில் கிறிஸ்தவர்களின் சுயாதீன இயக்கம் உண்டாகி கிறிஸ்தவர்கள் பலர் வீண்துன்பத்திற்காளாகி தங்கள் சொந்தச் செலவில் கட்டிய ஆலயங்களையும் பள்ளிக்கூடங்களையும் இழக்கநேர்ந்ததென்பதும் நமது கிறிஸ்தவ நேயர்களுக்குத் தெரியும். ஹிந்து நாடார்களால் கட்டப்பட்ட பல ஆலயங்களும் மதஸ்தாபனங்களும் அந்நியர்களால் கைப்பற்றப்பட்டது போலவே இதுவுமாயிற்று. இன்னமும் பல கிராமங்களில் குருக்களுக்கு மாறுபட்ட அபிப்பிராயங் கொண்டவர்களும், குருக்களின் சுய இஷ்டக் கொள்கைகளை ஆக்ஷேபிப்பவர்களுமான கிறிஸ்தவர்கள் சிற்சில சமயங்களில் குருக்களின் முயற்சியினாலும் கிறிஸ்தவ பொது ஸ்தாபனங்களிலுள்ள பொருள்ச்செலவின் பேரிலும் தன்னடக்கை ஜாமீன் வாங்கப்பட்டிருக்கிறார்கள். எனவே கிறிஸ்துவானவரின் பாடுகளையும் மரணத்தையும் சிந்தனை செய்யும் போது இவ்விஷயங்களை நாம் மறந்துவிட முடியவில்லை. தமது காலத்திலிருந்த குருக்களின் ஒழுங்கீனத்தைப் பக்ஷபாதமில்லாது கண்டித்த தற்காகவே சிலுவை மரத்திலேற்றப்பட்டவரும் தம்மைத் துன்புறுத்தியவர்களுக்கு மன்னிப்பருள வேண்டிக் கொண்டவருமான அப்புண்ணியனது சுபாவத்துக்கும் லக்ஷணத்திற்கும் இக்காலத்துக் குருக்களது செயல்கள் பொருத்தமானதுதானா? சட்டப்படி ஓர் கால் ஒழுங்காயும் பொருத்தமாயும் இருக்கலாம். நாம் ஓர் சங்கத்தின் அங்கத்தினராயிருக்கும் வரை அச்சங்கத்தின் விதிகள் நமது சுய இஷ்டத்துக்கு மாறுபட்டனவாயிருப்பினுங்கூட நாம் அதற்கு அடங்கி நடக்கவே கடமைப்பட்டிருப்போம். ஆயினும் கிறிஸ்துவானவரோ சட்டப்படி மட்டுமெல்ல சட்டத்திற்கு மிஞ்சியும் நாம் மற்றவர்களிடம் பொறுமை பாராட்டவேண்டுமென்றே போதித்திருக்கிறார். ஏழுதரம் மட்டுமல்ல ஏழெழுபது முறை மன்னிப்பருளல் வேண்டுமெனக் கூறியிருக்கிறார். ஒருவனது கன்னத்தில் அடிப்பவன் குற்றவாளி. கிறிஸ்துவின் கொள்கையிலோ மறு கன்னத்தையும் அடிக்கக் கொடுப்பது தர்மமென ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஆதலின் மார்க்க சம்பந்தமான அபிப்பிராய பேதங்களைத் தேச சட்டங்களைக் கொண்டு பரிகாரம் பண்ணிக்கொள்வது கிறிஸ்துவின் அல்லது அவரது அடியாரின் போதனையல்ல. மஹாத்மா காந்திகள் விசாரணையின் போது ஜட்ஜ் முன்பாக எழுதிப் படித்த தமது ஸ்டேட்மெண்டில் "நான் என் தேசத்துக்கு உண்மையுள்ள ஓர் பிரஜையாகச் செய்யவேண்டிய ஓர் பெரிய கடமையைச் செய்கிறதாக எனக்குத் தோன்றுகிறது போலவே, இத்தேசத்தில் சட்டப்படியமைத்துள்ள கவர்ன்மெண்டாருக்கு எவரும் செய்யாத ஓர் பெரிய ராஜதுவேஷமான காரியத்தை நான் செய்வதாகத் தோன்றியிருக்கிறது. ஆதலின் ஏற்பட்ட இக்கவர்ன்மெண்டின் சட்டப்படி நான் ஓர் பெரிய குற்றவாளியேயாவேன். ஆதலின் சட்டம் இடம் கொடுக்கக் கூடிய அதிஉயர்வான தண்டனையை எனக்கு விதிக்க வேண்டுமென்று தங்களை அன்புடன் வேண்டிக்கொள்வேன்" எனச் சொல்லி முடித்தார். இவ்வண்ணமே ஏற்பட்ட சட்டங்களை சீர்திருத்தவும், மாற்றவும் கிளர்ச்சி செய்ய வேண்டிய உரிமையும் அதிகாரமும் எல்லா மெம்பர்களுக்கும் உண்டு. இவ்வுரிமையை எவரேனும் தகாதவிதமாய் உபயோகிப்பரேல் மார்க்க சட்டங்களிலமைத்துள்ள உயர்ந்த தண்டனையையே விதிப்பது நியாயமாகும். இதைவிட்டு போலீஸாரைக் கொண்டு தமது சபையினரைப் பயமுறுத்துவதும் துன்புறுத்துவதும் கிறிஸ்து மார்க்க அடிப்படையான தத்துவங்களுக்குப் பொருத்தமானதாகாது. இதன்றி அனுவசரமாய் தம்முடைய அதிகாரத்தையும் அந்தஸ்தையும் பாதுகாக்கச் செய்யப்படும் கிறிஸ்தவ சிந்தையற்ற சுயநலக்கொள்கையென்றே கருதப்படும். யூதனாய்ப் பிறந்து யூத ஆசாரப்படி எட்டாம் நாள் சுன்னத்தடைந்து யூத ஆலயங்களுக்குப்போய் கோவிலுக்குரிய பலி சடங்குகளைக் கிரமமாய் நிறைவேற்றி வந்து தமக்கும் தமது சீஷர்களுக்கு மேற்பட்ட வரிப்பணங்களையும் ஒழுங்காய்க் கொடுத்துவந்த ஓர் உத்தமமும் நேர்மையுமுள்ள யூதனை அவரது குருக்களும் உதவிக்குருக்களும் சதி செய்து அக்காலத்து கவர்ன்மெண்டின் சகாயத்தைப் பெற்று வன் கொலையாய்க் கொன்ற சரித்திரத்துக்கும் இக்காலத்தில் சபையிலிருந்து சபைக்குரிய சகல சடங்குகளையும் அனுஷ்டித்து வரும் ஓர் சபையாளை போலீஸ் சட்டப்படி தண்டனைக்காளாக்கும் குருவுடைய நடபடிக்கும் வித்தியாசம் என்ன? யதார்த்தவாதி குருவானவர் விரோதி என்றார் பழமொழி.

ஓர் கிறிஸ்தவன்.

[தொடரும்.]

## துணுக்குகள்.

இந்தியாவில் பிணங்களுக்குவாயில் அரிசி போடுவது வழக்கமாயிருக்கிறது. ஆஸ்திரியாவில் தங்கம் போடுவது வழக்கமாம்.

* *

வேல்ஸ் இளவரசர் கிறை நற்போது 138 இராத்தல். இக்கிலேயில் தனது தேகம் பருத்துவிடுமோவென ஐயுற்று அதைத்தடுக்கும் முறையாக ஒருவித நாட்டியம் கற்றுவருகிறாராம்.

* *

ஐரோப்பாவிலுள்ள ஆல்பேனியா, ஆசியாவிலுள்ள ஆப்கனிஸ்தானம், ஆசீர், பூடான், நேபாளம், ஓமான், எமன், ஆப்பிரிக்கா மேற்குக்கடலோரமுள்ள லைபீரியா ஆகிய 8 தேசங்களில் இதுவரை இரயில் பாதை கிடையாதாம்.

* *

லண்டனிலுள்ள காது வைத்திய சாலையிலுள்ள ஒரு அறையில் இருதயத்தின் அடிப்பும், கண்ணை விரைவாக மூடித்திறக்கும் சத்தமுங்கூட கேட்கும்படியாக அவ்வளவு நுட்பமாக அவ்வறை நிச்சப்தமாயிருக்க தயார் செய்யப் பட்டிருக்கிறதாம்.

* *

சமீபகாலமாய் கிராமபோன் தட்டு பித்தளையினால் செய்யப்பட்டு வருகிறது. இது 10000 வருடங்களுக்காய் இருக்கக்கூடியதாம். ஆகையால் இப்போதுள்ள பாட்டை 10000 வருடங்களுக்குப் பின்வரும் மக்களும் கேட்டுக் கொள்ள சந்தர்ப்பம் இதன்மூலம் கிடைக்குமாம்.

* *

18—2—27-யில் தென்மலை இரயில்வே ஸ்டேஷனில் மதியம் 12 மணிக்கு மஞ்சள்மழை பெய்ததாம். தண்ணீர் சுத்த மஞ்சள் நிறமாயிருந்ததாம்.

பிரைஸ் எடுப்பதற்கான நாள்

நெருங்கிவிட்டது.

அதிஷ்டத்தை இழக்காதீர்கள்! தருணத்தை கைவிடாதீர்கள்!!

நாடார்குல மித்திரன் க்ஷேமநிதி லாட்டரிச் சீட்டு பெற்று

தர்மத்தைத் தேடுங்கள்;

லாபத்தை அடையுங்கள்.

பிரைஸ் எடுக்க சகல வேலைகளும் துரிதமாய் நடைபெறுகின்றன.

முந்துங்கள்! முந்துங்கள்!!

## மதிப்புரை.

### சமரச சன்மார்க்கத் தோத்திரத் திரட்டு.

இது காரைக்குடிச் சிவனடியார் திருக் கூட்டத்தாரால் வெளியிடப் பெற்றது. நல்ல காகிதத்தில் அச்சிட்டு காலிகோ பயிண்டு செய்திருக்கிறது. பாக்கெட் டைரி போல் பார்வைக்கு அழகாயிருக்கிறது.

தாயுமானவர், அப்பர், சுந்தரர், மணிவாசகர், இராமலிங்கர், அருணகிரி நாதர் முதலிய பெரியார்கள் பாடிய பல பாடல்களில் அருளும், அன்புங்கசிந்துருகும் முப்பத்திரண்டு பாடல்கள் எடுத்துப் பதிப்பிக்கப்பெற்றிருக்கிறது. நமக்கனுப்பிவித்த அக் கூட்டத்தாருக்கு நமது நன்றியைச் செலுத்துகின்றோம். சமரசசன்மார்க்க மோங்கக் கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

## கிடைக்கவேண்டிய பாக்கியம்.

### திருநெல்வேலி ஜில்லா கத்தோலிக் திருச் சபை

தென் இந்தியாவில் 400 வருஷங்களுக்கு முன் தனம் வீரமாமுனிவர் செவ்சவியேர் அவர்களால் சுவிசேசம் விதைக்கப்பட்டது. சென்னை ராஜதானியில் 765588 கத்தோலிக்கரில் திருநெல்வேலி ஜில்லாவில் மட்டும் 86992 கத்தோலிக் ஜனங்கள் இருக்கிறார்கள்.

இவர்கள் தூத்துக்குடி மேற்றிராணி ஆண்டவரவர்கள் மேல்ப் பார்வையிலும் திருச்சினாப்பள்ளி, மைலாப்பூர் மேற்றிராசன மேல்ப் பார்வையிலும் இருந்துவருகிறார்கள். ஆங்காங்கு குருமார்களையும் உபதேசி மார்களையும் வைத்து ஞாயிற்றுக்கிழமையில் ஞான உபதேசம் கற்பிக்கப்பட்டுவருகிறது. பட்டணங்களிலும் பெரிய கிராமங்களிலும் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் 100-க்கு 90 பேர் கல்வி இல்லாதவர்களாகையால் ஞான உபதேசம் வாரமொரு தடவை சொல்லிக்கொடுக்கும்போது மட்டும் கற்றுக்கொள்வதைத் தவிர சாவகாசப்படும் நேரங்களில் அவர்கள் தொடர்ந்து பார்த்துக்கொள்ளத் தெரியாத நிலைமையில் இருக்கிறார்கள். ஆகையால் இக்கல்விக் குறையை நீக்கும் பொருட்டு பாளையங்கோட்டையிலும், தூத்துக்குடியிலும் அடைக்கலாபுரத்திலும் ட்ரெய்னிங் ஸ்கூல் ஸ்தாபித்து மிடில் ஸ்கூலில் தேரிய மாணவருக்கும் 5-ம் வகுப்பில் தேரிய பெண்களுக்கும் (நார்மல்) உபாத்தியாயர் ஒழுக்கம் படிப்பித்துக்கொடுத்து அந்த உபாத்தியாயர் உபாத்தினிகளைக்கொண்டு படிப்பித்துக் கொடுக்கும்படி செய்து அவர்களையே உபதேசியாராக நியமித்து எல்லாப் பெரிய கிராமங்களிலும் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்து கற்றுக்கொடுக்க வேண்டியது. கல்வியை ஊட்டி நல்ல நிலமாக்கி ஞானவிதையை விதைத்தால் தான் ஒன்றுக்கு நூறுபலன் தரும். (லூக் 8-11

தேவ வசனமாகிய விதையை பாதையிலும் பாறையிலும் முள்ளிலும் விதைப்பதில் பலன்கிடையாமல்ப் போவதால் பாவ புண்ணியங்களை வாசித்தறியும்படி படிப்பை யூட்டவேண்டியதவசியம். 100-க்கு 90 பேர் படிப்பே இல்லாதிருக்கிற ஏழை ஜனங்களுக்கு படிப்பு கற்பிக்கவேண்டும். பாளையங்கோட்டை தூத்துக்குடி அடைக்கலாபுரம் இவைகளில் ட்ரெய்னிங்ஸ்கூல் ஸ்தாபித்து மிடில் ஸ்கூலில் தேரியவர்களுக்கும் அதற்குக் குறைந்த படிப்புள்ள ஆண்பெண் இருபாலருக்கும் ஒழுக்கம் பழக்குவித்து அதில் தேரியவர்களைக் கொண்டு 12-முதல் 15 ரூபாவரை மாசம் 1-க்கு சம்பளமும் உபாத்தினிக்கு 5 ரூபாயும் ஆக மீ 1-க்கு 20 ரூபாய் கொடுத்து அவர்களையே உபதேசியாராகவுமிருக்கச் செய்யலாம். இவர்களிடத்திலிருந்தும் சர்க்கார் டீச்சிங்கிராண்டு 16 அல்லது 20 ரூபாய்வரை கிடைக்கும். அதிகப் பொறுப்பில்லாமல் படிப்பும் விருத்தியாகும்.

புரட்டஸ்ட்டாண்டு மிஷன் சபையார் திருநெல்வேலி ஜில்லாவில் பாளையங்கோட்டையில் இரண்டு ட்ரெய்னிங் ஸ்கூலும் நாசரேத்தில் இரண்டு ட்ரெய்னிங் ஸ்கூலும் ஸ்தாபித்து நடத்தி வருகின்றனர். இந்த ஜில்லாவில் ஆயிரக்கணக்கான உபாத்தினி உபாத்தியாயர்கள் அதில் தேரி அந்த மிஷனுக்கே ஊழியம் செய்கிறார்கள். அவர்களைப் பதிதரென்று அழைக்கிறீர்கள். அந்த உபாத்திமார்கள் தினமும் இந்துப்பிள்ளைகளுக்கும் கிருஸ்தவப் பிள்ளைகளுக்கும் வேதப்பாடமும் கற்றுக்கொடுக்கிறார்கள். படிப்பில்லாமலிருக்கும் ஏழை கத்தோலிக் பிள்ளைகளுக்கும் படிப்பு கற்பிக்கவேண்டிய அவசியத்தை கத்தோலிக் குருமார்கள்கவனிக்கும்படி செய்து நார்மல் ஸ்கூல் ஸ்தாபிக்கும்படி வேண்டிக்கொள்வது கத்தோலிக்கர்களுடையபொறுப்பாகும். அப்போது தான் குருமார்கள் சீக்கிரம் நார்மல் ஸ்கூல் ஸ்தாபிப்பார்கள்.

ப. அ. குமாரவேல்நாடார்,

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# நாடார் மஹாஜனங்களுக்கு எனது அறிக்கை.

( சாரம். )

(இரங்கூன் பு. கு. அ. ஆ. எழுதுகிறார்.)

அன்புள்ள ஐயன்மீர்! கடந்த 12-2-27-ல் மதுரையிற்கூடிய நமது அங்கத்தினரின் விசேஷக்கூட்டத்திற்கு நமது ஜனத்தலைவர்களும், சங்கத்தின் பிரஸிடெண்டு, வைஸ் பிரஸிடெண்டு அவர்களும் விஜயஞ்செய்து மேற்படி கூட்டத்தை நன்கு சிறப்புடன் நடத்தி ஏழைமாணவர்களுக்கு தாங்கள் செய்யவேண்டிய அத்தியாவசியமான ஓர் சிறந்த உபகாரத்தை யாதொரு தடையின்றிச் செய்திருக்க வேண்டும். அவர்கள் அவ்விதஞ் செய்யாததுபற்றி விசனிக்கின்றேன். இன்னவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட ஓர் அரிய தியாகத்தை—கடமையை செய்யத்தவறிவிட்டார்கள். என்றாலும் அன்னவர்களுக்குநாடார்குல மக்களின் முன்னேற்றத்தில் சிறிதும் கவலை, அன்பு இல்லையென்று சொல்லமாட்டேன்.

நிற்க, சபையிலுள்ளவர்கள் மூன்றையே நம் நாடார்குல மித்திரனதிபரையும் உசிலம்பட்டி ஸ்ரீமான் ப. வீ. ஆதிமுத்துமாலைநாடாரவர்களையும் தலைமைப் பதவியையேற்று அக்கூட்டத்தை நன்கு சிறப்புடன் நடத்திவைக்கும்படி அன்புடன் வேண்டிக்கொண்டும் அன்னவர்கள் அதை மறுத்தது பொருத்தமாயில்லை.

ஸ்ரீமான் க. துரைச்சாமிநாடார் அவர்கள் தம் தீர்மானத்தை வெகு சாமார்த்தியமாக தம் க்ஷத்திரிய வீரத்தைக் காட்டி விடாத்திறமாய் தம் சொல்லம்புகளை எவி ஜெயித்துவிட்டார்கள். இன்னவர் தம் ஜெயத்தை மட்டும் கவனித்தாரேயன்றி அதனால் நம்சங்கமும் பாங்கும் ஒருவாறு கஷ்டப்பட நேரிடுமென்றதை மட்டும் அறவே மறந்துவிட்டாரென்றே நினைக்கின்றேன். மேற்படியார் எந்த நோக்கொடு நாடார் பாங்கையும் சிதம்பரமகமையையும் ஒப்பிட்டாரென விளங்கவில்லை. ஆனால் சிதம்பரமகமையோ சில தன்காரியப் புலிகளாகிய தனி மனிதர்களிடம் மூக்கிக்கொண்டு தவிக்கின்றது. நாடார் பாங்கோ பொதுவாக நாடார்குல மக்கள் யாபேர்களுக்கும் சிறப்பாக இரண்டு லக்ஷம் நாடார்களுக்கும் சொந்தமான ஓர் லிமிட்டெட் கம்பெனி. தனி மனிதர்களோ தங்களைக் கேள்ப்பவர் யாருமில்லை என மமதையோடிருக்கலாம். பாங்கின் நிர்வாகம் சற்றாகிலும் நேர்மாறாய் நடக்கும்பட்சத்தில் பொதுவாக பங்குதாரர்களும் டைரக்டர்களும் சிறப்பாக கவர்ன்மெண்டாரவர்களும் அக்காரியத்திற் பிரவேசித்து கம்பெனிக்கு எவ்விதமான கேடும் நேராவண்ணம் பாதுகாத்துக்கொள்ளக்கூடும். நண்பர் க. துரைச்சாமிநாடார் தீர்மானத்தின்படி சொத்து வாங்கினால் அதற்கும் நம்முடைய ஒற்றுமைக் குறைவாலோ வேறு பல காரணங்களாலோ நஷ்டமேற்படாதோ? நன்மையுந் தீமையும் எல்லாவகையிலுமுண்டு என்று நண்பர் துரைச்சாமிநாடார் பிடிவாதத்தை விட்டிருந்தால் மிகவும் திருப்திகரமாயிருந்திருக்கும். நமது சமுகத்தின் மேன்மைக்கு அடிப்படையாக உள்ளவை கீழ்கண்ட மும்மணியொத்த 1-வது நாடார்மஹாஜன சங்கம் 2-வது நாடார்பங்கு, 3-வது நமது குலப்பத்திரிகைகள். இவை மூன்றும் எவ்விதமான இன்னலுமின்றி பிரகாசத்தோடு விளங்க வேண்டும். இவற்றில் உடல் வளர்ச்சிக்காகச்சங்கமும், பொருள்வளர்ச்சிக்காகப் பாங்கும், ஆத்ம ஞானத்திற்காகப் பத்திரிகைகளுமாக ஒன்றற்கொன்று உதவியாகவிருந்து நம்மைத் தூய்மைப்படுத்த வேண்டுமேயல்லாது வேறு மார்க்கம் அவ்வளவு சுலபமாகாது. ஆகவே இவ்வியாசத்தைக் கண்ணுறும் நண்பர் துரைச்சாமி நாடார் சகாக்கள் இனிமேலாவது மேற்சொல்லிய திரிவேத்திரங்களை யொத்த சங்கமும், பாங்கும், பத்திரிகைகளும் புத்துயிர்கொள்ளும் முறைகளில் முன்னிற்கும்படி வேண்டிக்கொள்கின்றேன்.

# பஞ்சமால் ராஜ்யமும், கிராமசுயராஜ்யமும்.

## கிராம சுயாதீனமே தேவை.

சென்ற மார்ச்சு மீ 21உ மித்திரன் 5-ம் பக்கத்தில் முதற்காட்டிய தலைப்புடன் கூடிய நிருபம் கண்டோம். காயாமொழி ஸ்ரீமான் சுந்தரக்குமார்ஆதித்த நாடாரவர்கள் வெகு சிரமத்துடன் "பொதுஜன உபகாரம்" கருதி வெளியிட்ட நிருபம் கவனிக்கத்தக்கதுதான்.

1918-ம் வருஷம் ஆகஸ்டு மீ அறிக்கையின்படியும் 1919-ம் வருஷம் வழங்கப்பட்ட புதிய சீர்திருத்தத்தின்படியும் 1920-ம் வருஷத்தில் ஸ்ரீமான் ஆதித்தநாடார் அவர்கள் சொல்லுகிறபடி தேசாபிமானிகள் சட்டசபைகளில் கிளர்ச்சி செய்தபயனாயும் அக்காலத்தில் சென்னை மாகாணத்தில் ஆட்சிமுறை நடத்திய ஜஸ்டிஸ் கட்சி மந்திரியால் பஞ்சாயத் ஆக்ட் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அஃது நாளடைவில் சிற்சில இடங்களில் அமுலுக்கும் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

நம் பாரதநாட்டை நம்மவர்கள் (இந்தியர்கள்) ஆண்டு வரவேண்டுமென்ற உன்னதக் கொள்கைக்கிணங்க கிராம வாழ்க்கையில் நம்மவர்கள் சுயராஜ்யம் பெற்று நம்மை நாமே ஆண்டு கொள்ளப்பயிற்றுவிக்கும் சாதனமாக பஞ்சாயத்து ஏற்படுத்தப்பட்டதென்பது வெள்ளிடைமலை. அந்நோக்கத்தோடு நிறுவப்பெற்ற பஞ்சாயத் சபைகள்கிராம சுயராஜ்யத்தையளித்துவர ஏதுவாக அமைக்கப்படுகின்றதா என்ற கேள்விக்கு இடமேற்பட்டு விட்டது.

---

## எனது வேண்டுகோள்.

சங்கத்தின் நிர்வாகஸ்தர்களுக்கும் பொதுஜனாபிமானிகளுக்கும் எனது வேண்டுகோள் யாதெனில்—நமது ஜனசமுகத்திற்கு நம் சங்கம் ஓர் உடலாகவும், நம் பாங்கு அதன் உயிராகவும், நம்குலப் பத்திரிகைகள் மேற்சொல்லிய இரண்டையும் போஷித்துக் காப்பதாக விளங்குகின்றமையால் இம்மூன்றிற்கும் எவ்விதக் கேடும் நேராவண்ணம் மிக ஜாக்கிரதையாகப் பாதுகாக்கவேண்டியது நம் ஒவ்வொருவரையும் பொறுத்த கடமையாகும். எனவே மெஜாரிட்டியென்ற அளவில் கூடித்தீர்மானம் நிறைவேறியிருப்பினும் மீண்டும் புனராலோசனை செய்யுமாறு வேண்டுகிறேன். நம்ஜன இருஸ்தாபனத்தலைவர்களும் கலந்தாலோசித்து கூடியசீக்கிரம் பதினேழு வது கான்பரன்ஸைக்கூட்டி அக்கான்பரன்ஸில் பிரஸ்தாபவிஷயத்தை அதாவது:—

(1) சங்கம் எந்நோக்கொடு பாங்கை ஸ்தாபகம் செய்ததோ அதே நோக்கத்துடன் அதற்கு பங்கு சேர்த்துக் கொடுப்பதோடு மற்றும் தம்மாலியன்ற உதவியையும் செய்யவேண்டும்.

(2) பாங்கும் தான் முன் வாக்களித்தபடியே யாதொரு தடையும் சொல்லாமல் கிடைத்தலாபத்தில் பத்தில் ஒருபாகத்தைக் கட்டாயம் நம் சங்கத்திற்கு கல்வியபிவிருத்திக்காகக் கொடுத்து விடவேண்டும்.

(3) பிரஸ்தாபப் பணத்தை சொத்து வாங்காது மேற்படி பாங்கிலேயே பங்கெடுத்தாவது அல்லது டிபாசிட்டாக வட்டிக்குக் கொடுத்தாவது வைக்கவேண்டும். மேலும் சங்கத்தில் ஒரு காசு இருப்பிலிருந்தாலும் அதையும் நம் பாங்கிலேயே ஜமா போட்டு வைக்கவேண்டும். இவ்விஷயம் என் ஒருவனின் அபிப்பிராயமன்று. இப்பர்மாவிலுள்ள ஒவ்வொரு முக்கியஸ்தரின் அபிப்பிராயமாகும்.

(4) வையூரில் நாடார்கள் மற்றவர்களால் படும் கஷ்டத்தில் உடனே சங்கமும்நம்குல மேதாவிகளும் கவனம் செலுத்தி சட்டசபை மூலமாகவேனும் அல்லது உயர்தர உத்தியோகஸ்தர் மூலமாகவாவது உடனே நிவர்த்தி செய்து வைக்கவேண்டும்.

---

தேசம் விடுதலையடையப் பல தேசாபிமானிகள் தங்களைத் தியாகஞ்செய்து அரும்பாடுபட்டு வந்திருக்கிறார்கள்—வருகிறார்கள். இதற்கிடையில் நேர் விரோதமாக பற்பலர் கிளம்பி நாடு அந்நியர் ஆதிக்கத்துக்குள்ளிருக்கப் பக்கபலமாயிருந்து வருகிறார்கள் என்பதுவும் தற்கால ராஜீய உலகில் காணக்கிடக்கின்றது.

இதையறிந்த உண்மை தேசாபிமானிகள் பலர் காங்கிரஸ் மகாசபையினின்றும் வெளிவந்துவிட்டார்கள். மகாத்மாகாந்தி யடிகளுங்கூட காங்கிரஸைவிட்டு விலகி கதரை நாட்டில் பரப்பவும் தீண்டாமையை வேண்டாமெனக்கருதி உழைக்கவும் வெளிவந்துவிட்டார். அன்னவர்களின் மனப்பான்மை என்னவென அறிவோமானால் சுயராஜ்யம், சுயாதீனம் என்ற வார்த்தைகளால் உலகத்தை மருட்டி அந்நிய ஆதிக்கத்தை நம் நாட்டில் நீடிக்கச்செய்ய பக்கபலமாயிருக்கும் சிலரின் விவாதத்திலிருந்து விலகிவிட வேண்டுமென்றும், நம் நாட்டார் உண்மையான சுயாதீனம் அடைய வேண்டுமென்றும், சுயாதீனமில்லாத விடத்து நம் நாட்டிற்கு சுயராஜ்யம் வந்தால் அது நிலைக்காதென்றும், அப்பேர்க்கொத்த சுயராஜ்யம் தேவையில்லை என்றும் தெளிவாய்த் தெரிகிறது.

தற்போது சென்னை மாகாணத்தில் உத்தம தேசபக்தரும், வைக்கம் வீரரும், "குடியரசு" அதிபருமாகிய ஈரோடு ஸ்ரீமான் ஈ. வி. ராமசாமி நாயக்கரவர்கள் சுயாதீனப் போராட்டத்தை ஆரம்பித்து வருகிறார்கள்.

பஞ்சமால் நாட்டின் கிராம சுயராஜ்யத்திற்கும் தற்கால உலகிற்கும் வெகு வித்தியாசமுண்டு. பஞ்சாயத் சபை ஜனங்களுக்கு நன்மை விளைக்குமென்ற போதிலும் நன்மையான ஸ்தாபனத்தை துஷ்பிரயோகமான வழியில் ஜனங்களுக்கு சுயாதீனமில்லாமல் சபையை நடத்த அச்சபை நிர்மாண விஷயத்தில் இடமில்லாமல் போகவுமில்லை.

பஞ்சாயத்தை உருவகப்படுத்தும் ஊழியர் கிராம ஜனங்களனைவரையும் கூட்டாமல் ஒரு சிலரை தம்வயப்படுத்திக்கொண்டு குறிப்பிட்ட ஓர் கிராமத்தில் பஞ்சாயத்சபை ஸ்தாபிக்கப்பட்டு விட்டதென்று பத்திரிகைகளிலும் ஜில்லாக் கெஜட்டிலும் விளம்பரப்படுத்த இடமில்லாமல் போகவுமில்லை.

மேலும் பஞ்சாயத் சபையை நிர்மாணஞ்செய்யும் ஊழியர் நல்லெண்ணத்துடன் ஷை சபையை உருவகப்படுத்தினாலும் ஷை சபைக்குவரும் தலைவர்களும் மெம்பர்களும் இந்தியா சுயாதீன வழியில் சுயராஜ்யமடைய சிலர் எப்படி முட்டுக்கட்டையாயிருக்கின்றார்களோ அஃதேபோன்று கிராம ஜனங்கள் சுயாதீனம் பெற்று சுயராஜ்யமடைய முட்டுக்கட்டையாயிருக்கவும் இடம் ஏற்பட்டு விடுகின்றது.

மேலும் பஞ்சாயத் சபையின் தலைவர்களும் மெம்பர்களும் கிராம ஜனங்களையடக்கியாளவும் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றவும் இடமேற்படாமல் போகவுமில்லை.

ஒரு தலைவருக்குள்ளும் சுமார் 15 மெம்பர்களுக்குள்ளும் ஓர் கிராமம் அடிமைப்படும்போது தேசம் என்ன நிலை அடையுமென்பதை தேசாபிமானிகள் தான் உய்த்துணரவேண்டும். சுயாதீனமின்றேல் சுயராஜ்யம் தேவை இல்லை என்ற எதிரொலி கேட்கும் இக்காளில் ஜனங்களுக்கு சுயாதீனம் வழங்க முடியாத கொள்கைகளையும் உள்ளடக்கிக்கொண்டிருக்கும் பஞ்சாயத்சபை என்ற கிராம சுயராஜ்யத்தால் நாட்டிற்கு நலமில்லை யென்றே முடிவுசெய்ய வேண்டியதிருக்கின்றது.

பஞ்சமால் நாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்ட விஷயங்களுக்கு ஆதாரமிருந்து வருகிறது.

ஸ்ரீமான் ஆதித்தநாடாரவர்கள் இராமநாதபுரம் ஜில்லாக் கலெக்டர்கூறும் வாக்கியங்களை எடுத்து மேற் கோள் காட்டியிருக்கின்றார். இஃது எனக்கு மற்றொன்றை ஞாபகப் படுத்துகின்றது.

ஒருசில வருஷங்களுக்கு முன் திருநெல்வேலிஜில்லா கலெக்டர் டேவிஸ் துரை ஐ. ஸி. எஸ். அவர்கள் திருநெல்வேலிஜில்லா நாடார் மகாநாடு வெங்கடாம்பட்டியில் கூடிய சமயம் அம்மகாநாட்டைத் திறந்து வைத்து பிரசங்கஞ்செய்யும் பொழுது "உங்களுக்குள் வெகு காலமாயிருந்து வரும் ஓர் தொழிலை நீங்கள் விட்டுவிட முயற்சிக்கிறீர்கள். அதை மறுபடியும் அபிவிருத்திபண்ணுங்கள். ஒரு முக்கிய கைத்தொழிலை நீங்கள் விட்டுவிட நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது" என்று பொருள்படப் பேசினார். டேவிஸ் துரையவர்கள் சொன்ன வார்த்தைகள் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கீதையில் சொல்லிய வார்த்தைகளல்ல. அவைகளை நாம் ஏற்க வேண்டுமென்பது சட்டமுமல்ல.

இராமநாதபுரம் ஜில்லா கலெக்டர் கூறிய வார்த்தைகள் பஞ்சமால் நாடுகளுக்குத் தவிர மற்றும் ஏனைய இடங்களுக்கு மட்டும் ஒவ்வலாம்.

கிராமப் பஞ்சாயத்து ஜனங்களுக்கு சுயராஜ்யம் அளிக்கவல்லது என்றால் ஜனங்களுக்குள் கிராமப் பஞ்சாயத்தால் சண்டை, சச்சரவு, ஒற்றுமைக் குறைவு ஏன் ஏற்படவேண்டும்? பஞ்சாயத்து நோக்கங்களுக்கு ஒத்துழைக்கவில்லையென்றும் பஞ்சாயத்தின் நன்மைகளை ஜனங்கள் அறியாதது ஓர் காரணமென்றும் பதில் கூறலாம். உண்மையிலேயே ஜனங்களுக்கு ஷை பஞ்சாயத்துசபையை உருவகப்படுத்தும் ஊழியர் மீதும் தலைவர்கள் மீதும் மெம்பர்கள் மீதும் நம்பிக்கையும் நல்லெண்ணமுமுண்டாயிருக்குமானாலும், ஜனங்கள் சுயாதீன நிலையிலிருக்க ஷை தலைவர்களால் பழக்கப்பட்டிருந்தாலும், பஞ்சாயத்து நன்மை இன்னதென்றறியாமலே ஜனங்கள் ஒத்துழைத்தே தீர்வார்கள்.

சுயராஜ்யம் அளிக்கவல்லது என்ற வெறும் பெயரைக் கொடுத்துக் கொண்டு சுயாதீனமற்ற வழியில் ஜனங்களை நடத்த ஷை பஞ்சாயத்து தலைவர்கள் முன்வரும் பொழுது எங்ஙனம் ஜனங்கள் ஒத்துழைக்க முடியும்?

ஆகவே "கிராமந் தோறும் பஞ்சாயத்து சபை வைக்கும்படி வேண்டுகிறேன்" என்று ஸ்ரீ ஆதித்தநாடாரவர்கள் சொல்லும் விஷயத்தை அவர்கள் புனராலோசனை செய்துகொள்ள நாம் வேண்டுதல் செய்கின்றோம்.

சுயாதீனமில்லாத கிராம சுயராஜ்யம் தேவையில்லை என்று ஆதித்த நாடாரவர்களுக்குத் தெரிவிக்கின்றோம்.

மேலும் திருநெல்வேலி ஜில்லாவில் சில பகுதிகளுக்கு நாடார்குலத்தில் பிறந்த சிலருக்கு நாடார்களே சுயாதீனம் கொடுக்க மறுக்கிறார்கள். அக்கொள்கைகள் காயாமொழியிலும் மற்றும் சில இடங்களிலும் உண்டென்பது மறைக்கமுடியாத உண்மை. இப்படியிருக்க ஸ்ரீ ஆதித்தநாடாரவர்கள் கிராமச் சுயராஜ்யம் வாங்கிக் கொடுக்க முந்துவது எமக்கு ஆச்சரியத்தையும் நகைப்பையும் கொடுக்கின்றது.

கிராமச் சுயராஜ்யம் வந்துவிட்டால், அதாவது கிராமந் தோறும் பஞ்சாயத்து சபை யேற்பட்டுவிட்டால் சுயாதீனம் ஏற்பட்டுவிடும் என்று சமாதானம் கூறலாம். அஃது எப்படி இருக்குமென்றால் இந்தியாவுக்கு சுயராஜ்யம்கிடைத்துவிட்டும்; பின்னால் நமக்குள்ளிருக்கும்குறைகளை நீக்கிக்கொள்ளலாம் என்று சில தேசாபிமானிகள் கூறுவது போலாகுமே தவிர வேறல்ல.

நம் முன்னோர்கள் தக்ஷணநாடார்களுக்குச் சொந்தமாய் பரோபகாரமான எண்ணத்துடனும் குலப் பெருமையை நாட்டும் நனவேணுக்கத்துடனும் பேட்டைகளாகிய கோட்டைகளைக் கட்டினர்.

ஜனங்களுக்கு கிராம சுயராஜ்யம் வாங்கிக்கொடுக்கும் நோக்கமாய் உழைக்கிறோம் என்பவர்கள், பேட்டைகளின் நிர்வாகத்தில் தக்ஷணநாடார்களுக்குக் கொடுத்திருக்கும் சுயாதீனமென்ன? பேட்டைகளைத் தங்கள் வயப்படுத்தி நிர்வாகத்தை ஏதேச்சாதிகாரமாய் நடத்திவருகிறார்கள் என்பதை மறைக்கமுடியுமா?

நம்முன்னோர்கள் என்ற உவமானம் ஏன்? இத்துடன் நிறுத்துவாம்.

க. போ. சோமசுந்தரநாடார்.

குறிப்பு:—இது சம்பந்தமான விவாத வியாசங்கள் இனிப் பிரசுரிக்கப்படமாட்டாது. (ப-ர்.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## இலங்கை வர்த்தமானம்.

(மனோகரன் எழுதுகிறார்)

### நிலங்கள் வழங்கப்படுகின்றன.

சமீபத்தில் இலங்கை சட்டசபையில் இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களை நிலமில்லாத பொது ஜனங்களுக்கு பகிர்ந்து பயிரிடக்கொடுக்க கமிஷன் நியமிக்க வேண்டுமென்று தீர்மானமொன்று நிறைவேறியிருக்கிறது. அது விஷயமாய் ஓர் கமிட்டியை நியமனஞ் செய்திருக்கிறார்கள். இக்கமிட்டியாரால் ஏழைக் குடியானவர்களுக்கு நிலங்களைப்பிரித்துக் கொடுப்பதுடன் பொருளுதவியும் செய்யப்படுமாம். இவர்களுக்குப் போதிய அதிகாரங்களும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, வரவிருக்கும் கமிஷனுக்கு முன் இக்கமிட்டியார் தங்கள் முயற்சியிலீடுபட்டு களுத்துறை பகுதியிலுள்ள நிலங்களை 3-5-ஏக்கர்களாக ஏழைக் குடியானவர்களுக்கு கொடுக்கப்போகிறார்களாம். தென்னை, ரப்பர், பப்பாழி, காய்கறிகள் முதலான தானியவகைகளைத் தவிற வேறொன்றும் பயிரிடுதல் கூடாதாம். ஆனால் ரப்பரையும் சேர்த்திருப்பதிலிருந்து கயவலும் தொனிக்காமலில்லை. இவ்வாறு ஏழைகளுக்கு வழங்கும் நிலம் பொருள்முதலான உதவிகளுக்கு ஈடாக காலவரையில் அவர்களிடமே சிறுகச் சிறுக வசூலிக்கப்படுமாம். அரசாங்கம் இம்முறையை அனுஷ்டிப்பதால் தொழிலாளர் சமூகம் புனருத்தாரணமடையு மென்பதிற் சந்தேகமில்லை. அப்படி நிலம்பெறும் குடியானவனொருவன் இறப்பின் அவனின் வாரீஸ்தாரே அதை நிர்வகிப்பார்களாம்.

• • • •

## இருமின்னொளிகள் விஜயம்.

நிகழவிருக்கும் தென்னிந்திய ஆதிதிராவிடவைதீக சமாஜத்தின் 5-வது வருடப் பூர்த்தி விழாவை முன்னிட்டு ஆதி திராவிடர்குல குருவும் சென்னை சட்டசபை அங்கத்தினருமாகிய ஸ்ரீமத் சுவாமி சக ஜானந்தம் அவர்களும் சட்டசபையின் மாஜி அங்கத்தினரான ஸ்ரீ ஆர். வீரையன் அவர்களும் ஏப்பிரல் மீ 30 ௳ இங்கு விஜயம் செய்கின்றார்கள். நிகழும் 1-5-27-ல் சமூக விழா நிறைவேறும். ஆதிதிராவிட சகோதரர்களுக்கு இந்நன்னாட்கள் திருநாட்களாகவே யிருக்கும்.

• • •

2-4-27-ல் களுத்துறையில் ஒரு மனிதன் நாலுகால்களையுடைய ஓர் கோழிக்குஞ்சை அதிக விலைக்கு விற்கும் பொருட்டாக பஜாருக்குக் கொண்டுவந்தான். ஜனங்கள் இவ்விநோதப் பிறவியைக்கண்டு திரள் திரளாகக் கூடியிருக்கையில் பலாத்காரமாய் ஒரு மோட்டாரோட்டி அந்த கோழிக்குஞ்சை அபகரித்துக் கொண்டோடினான்.

## புதிய ஸ்டாக்! விலை வெகுசகாயம்!! உடனே ஆர்டர் செய்யுங்கள்.

| பாக்கட் வாச். | ரூ. அ. |
|---|---|
| ரெயில்வே டைம்கீப்பர் | 3—0 |
| ரெயில்வே ரெகுலேட்டர் | 3—8 |
| ராஸ்கோப் ஸிஸ்டம் | 3—8 |
| நிக்கில் லீவர் 10 ஜியூல்ஸ் | 8—8 |
| ஷை 7 ஜியூல்ஸ | 7—8 |
| 8 days நிக்கில் | 9—8 |
| ரிஸ்ட்வாச். | |
| நிக்கில் ஸிலிண்டர் ,, | 5—8 |
| வெள்ளி ஷை ,, | 6—8 |
| ரோல்ட்கோல்ட் ,, | 6—4 |
| நிக்கில் லீவர்ஸில்க் பட்டையுடன் | 12-8 |
| வெள்ளி ஷை | 15—8 |
| ரோல்ட் கோல்ட் ரிஸ்ட் | 15—0 |
| 18 காரட் கோல்ட் ,, | 25—0 |
| B. டைம்பீஸ் | 2—0 |
| பிராட்வெஸ்ட் டைம்பீஸ் | 3—12 |
| Westend co's. B. டைம்பீஸ் | 2—12 |
| அன்சோனியா B. டைம்பீஸ் | 5—0 |
| ஷை அலாரம் ,, | 4—8 |
| பிக்பென் அலாரம் ,, | 9—8 |
| பேபிபென் ,, | 10—0 |
| R. G. ரிஸ்ட்செயின் | 3—8 |
| R. G. பக்கல் Silkstrap | 2—8 |
| R. G. பாக்கெட் செயின் | 6—8 |
| பவுண்டன் பேனுக்கள். | |
| வாட்டர் மென் | 7—0 |
| ஸ்வான் | 5—8 |
| ஹார்ட்வேர் | 2—8 |
| பிளாக்பர்டு | 3—0 |
| ஓ மேக்கர் | 5—8 |
| எலக்டிரிக் பாக்கட் லாம்ப் | 1—4 |
| ஷை பெரிய லென்ஸ் | 1—8 |
| ஹாண்ட்லாம்ப் பெரிய லென்ஸ் | 1—8 |
| டார்ச் லாம்ப் பெரிய லென்ஸ் | 8—0 |

ராமநாத் & கோ,
தபாற் பெட்டி நெ 1248, சென்னை.

## தாய்மார்கள் கவனிக்க வேண்டியது.

சில தாய்மார்களுக்கு பலவித காரணங்களால் பால் சுருங்கி சிசுக்கள் தவிப்பதை நிவர்த்தி செய்து பால் வளரும்படி செய்ய நம்மால் ஒரு தேங்காய் ஜெபித்து வி. பி. செய்யப்பட்டு வருகிறது. 20 வருடத்து அனுபவம்; எம்மதஸ்தரும் வாங்கலாம். அனுபவிக்கும் விதம் தேங்காயுடன் அனுப்பி வைக்கப்படும். இதன் விலை தபாற் செலவின்றி ரூ 1—4—0 மாத்திரம்.

குறிப்பு:— காத்துக்கருப்பு விஷயத்திற்கும், தேக சம்மந்தப்பட்ட வியாதிகளுக்கும், மந்திரத்தாலும் மருந்தாலும சிகிச்சை செய்யப்படும்.

விலாசம்:—

எ. எஸ். எ. மாந்தரீக டாக்டர்,
இனும்தார் வீடு,
சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம்,
திருச்சி.

## உடனே தேவை.

தமிழ்ஜில்லாக்களிலும் கொழும்பு, பினங்கு, சிங்கப்பூர் பர்மா, இரங்கூன்முதலிய வெளிதேசங்களிலும் நமக்கு ஏஜெண்டுகள் தேவை. ஜேயமில்லாவிடில் பணம் வாபீஸ் என்ற கண்டிஷன் பேரில் நாம் விற்பனை செய்கிறோம். மற்ற விவரங்களுக்கு ஒரு அணா ஸ்டாம்பு வைத்து எழுதவும்:—

ஆர். சேஷன், எடிட்டர்,
ஸ்ரீரங்கம், (திருச்சி.)


## அவைஎங்கேகிடைக்கும்?

அருப்புக்கோட்டை "நாடார்குல மித்திரன்" பத்திராதிபர் ஸ்ரீமான் ரூ. ஆ. முத்துநாடாரவர்கள் இயற்றிய

தென்னாட்டுப்புலி
ஜெம்புலிங்கம் ஜீவிய சரித்திரம். (1)

ஐரோப்பா யுத்தத்தில் அரும்பாடுபட்ட
அவுசரியா நாடார் ஜீவிய சரித்திரம்.
(சித்திரப் படங்களுடன் கூடியது.) (2)

திருமலையப்பபுரம் ஸ்ரீமான் பா. பி. இரத்தினபாண்டியர் இயற்றிய
சௌந்தரகாந்தி நாவல். (3)

சென்னை நாடகாசிரியர் ஸ்ரீமான் ச. கு. சங்கரலிங்க நாடாரவர்கள் இயற்றிய
நாடார் மகாஜன சங்க வாரக்கீர்த்தனை. (4)

ஆகியவைகள் கீழ்க்கண்ட விலாசத்தில் கிடைக்கும். வாங்கிப்பயன் பெறுங்கள்.

"இரத்தின விலாஸ்",
28 நிர். 1-வது குறுக்குத்தெரு,
கொளும்பு.



## மேகநிவாரணி சஞ்சீவிரணி

(மேக ரோகங்களுக்கு கைகண்ட ஔஷதம்.)

இம்மேக எண்ணெய்யானது சுமார் 50-வருஷங்களுக்கு முன் ஒரு பெருத்த மஹானால் தயார் செய்யப்பட்டது. இந்த ஔஷதத்தினால் அநேக துயருறும் வியாதியஸ்தர்கள் எளிதில் சுகமடைந்திருக்கிறார்கள். தற்சமயம் பொதுஜன சௌகரியத்திற்காக இங்கு வெளியிடப்பட்டிருக்கிறது.

நீங்கும் வியாதிகள்:...மேகப்படைகள், மேகஊரல், பவுத்திரங்கள், சொறி, தேமல், சிரங்கு, படர்தாமரை, கண்டமாலை, வீதகவாய்வு, பாரிசவாய்வு, கைகால்முடக்கு, கைகால் வீக்கம், வெரைவாதம், நீர்வியாதி, வெள்ளை, இடுப்புவலி, ஆராதபுண்கள், மஞ்சள் காமாலை, தலைநோய், ஜுரம், வயிற்றில் ஜுரக்கட்டி, ஸ்திரீ சம்மந்தப்பட்ட சகலரோகங்கள் முதலிய வியாதிகள் நீங்கி ரத்தம் சுத்தியாகி யாவரும் ஆச்சரியப்படும்படியாய் தேக பலமும், முகவசீகரமும் புத்திர சந்தானமும் உண்டாகும். உபயோகிக்கும் விதம் புட்டியுடன் காணலாம். இவை வீண் போலி விளம்பரம் என்று நினைக்கவேண்டாம்.

நாள்பட்ட வியாதிகளுக்கு 5 நாள் எண்ணெய் ரூபாய் 3
சாதாரண வியாதிகளுக்கு 3 நாள் எண்ணெய் ரூபாய் 2

சென்னை ராஜதானிக்கு சோல் ஏஜெண்டுகள்,
ஆர். கே. பிரீடம் அண்டு கோ,
1/25 முல்லாசாயபு தெரு,
சௌக்கார்பேட்டை, மதராஸ்.



சென்னை, ச. கு. சங்கரலிங்க நாடார் எழுதிய
சிறந்த செந்தமிழ் நாவல்

பார்க்கப் புதுமை! படிப்பதற் கினிமை!!

பவளப்பதுமை என்னும்
## மலையாளத்து மர்மம்.

நாவலிற் சிறந்த நாகரீக நாவல்
நாட்டிற் குகந்த நவீனக நாவல்
அற்புதக் கற்பித அதிசய நாவல்
சித்திரப் படங்கொண்ட செந்தமிழ் நாவல்
மானிடர்க்கேற்ற மனோகர நாவல்
புத்திபோதிக்கும் புதிய நாவல்

250 பக்கம். நான்கு சித்திரப்படங்கள்.
புத்தகம் 1-க்குவிலைரூ 1—4—0. உடனேஎழுதுங்கள்.

விலாசம்:— மானேஜர்,
ரஞ்சித மனோகர புஸ்தகசாலை,
53. செட்டித்தெரு கொளும்பு.

விவேகம், விநோதம், விகடம், அற்புதம் நிறைந்து
படிக்கப் படிக்க வியப்பைத் தரும் நாவல்.



அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றிருக்கிறோம்.

## ஜோதிடம்.

ஒரு வருஷபலன்! ரூபாய் ஒன்றுதான்.

உங்களுடைய எதிர்காலபலனை அறிந்துகொள்ள விரும்புகின்றீர்களா? அப்படியானால்உங்களுடையஜெனநக்ஷத்திரம்அல்லது பெயரை எழுதி அனுப்பினால் தற்சமயம் நடக்கும் 12 மாத பலன்கள் அதாவது:—உத்தியோகம், வியாபாரம், புத்திர சந்தானம், யோகம், விவாகப் பொருத்தம் முதலிய பலாபலன்களை எழுதி அனுப்பப்படும்.

சிற்றின்ப சாஸ்திரம் என்னும் புத்தகம் 1-க்கு விலை அணா 8. எமது விலாசம்:—

"ஜோதிடசாலை"
(நா) என்னூர் போஸ்டு, செங்கல்பட்டு ஜில்லா.


## தேவை.

நமது நாடார்மகாஜன சங்கத்திற்கு 3 பிரசாரகர்கள் தேவை. பிரசங்கம் செய்வதில் திறமையுள்ளவராய் இருக்கவேண்டும். ஆங்கிலப் பயிற்சியுமிருந்தால் மிகவும் நல்லது. விபரத்திற்கு காரியதரிசிகள், "நாடார்மகாஜன சங்கம்", 221. கீழமாரட் வீதி, மதுரை என்ற விலாசத்திற் கெழுதவும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection